தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

என்றும் ஒரே நிலை - ஏன் ?

என்றும் போல் தேர்தல்வரும்; முடிவுவரும்;
ஆங்காங்கே, போட்டியிட்டே ஆர்ப்பரிப்பார்
பலருக் குள்ளும்,
என்றும் போல் ஒவ்வொருவர்
தேர்ந்தெடுக்கப் பெறுவார்கள் !
அமைச்சரவை அமைப்பார்கள்; அமருவார்கள் !
என்றும் போல்,
தருக்கம்வரும்; சட்டம்வரும்; திட்டம்வரும்;
செய்திவரும்; எல்லாமும் வரும் ! – ஆனாலும்,
என்றும் போல் ஏழையரின் – உழைப்பவரின் –
நிலைமட்டும் இருந்தபடி யிருந்துவரும் !
– எண்ணிப் பார்ப்பீர் !

இதுகாறும் எத்தனையோ தலைவர்வந்தார்;
கூட்ட மிட்டார்;
"தோழர்களே ! அரிசி, புளி, மிளகாய் எல்லாம்
குதிகாலில் இறக்கை கட்டி,
விலையேறிப் பறந்த"தென்று
கூச்சலிட்டார்; மறியலிட்டார்; 'குறைப்பேன்' என்றார் !
அதிகாரம் கைக்கு வரும்;
அப்படியே செருக்குவரும்; இயங்கிவரும் ! ஆனாலும்
உழைப்போர் மட்டும்
மிதிகாலில் நசுக்குண்ணும் புழுப்போலத்,
துடிக்குநிலை இருந்தபடி யிருந்துவரும் !
– எண்ணிப் பார்ப்பீர் !

சுவடி: 9. ஓலை: 2. விலை: 75காசு.

நமக்கு வந்த மடல்கள்.

: **256:** உலகமாப் பாவலன் பட்டம் பெற்றபோழ்து
ஓலம் இல்லை; ஒப்பாரி இல்லை;
சுண்டற் கடலைப் பண்டா ரகர்பட்டம்
சூடு தந்ததாம்; சொரணை தந்ததாம்!
பட்டந் தாங்கிக ளெல்லாம் பணிந்திடும்
பாவல ரேறு பகடி பகர்கின்றார்;
மேலையான் பெற்றால் மெச்சல் பலவுண்டு;
கீழையன் பெற்றதால் கிளர்ச்சி வேண்டுமோ?
தென்மொழி யார்க்கு 'நாத்திகம்' மட்டுமே
சென்றதோ என்னவோ? 'விடுதலை' 'முரசொலி'
மற்றெந்த நாளிதழும் சென்றிட வில்லையோ?
முற்றுணர்ந்தும் ஒலிப்பது 'நாத்திகம்' ஒன்றே!
—பெ. வெற்றிக்கூத்தன், திருச்சி-8.

0: 257: அன்பினிய பாவலர் அவர்கட்கு, வணக்கம் கடந்த சில திங்களாகவே தங்கட்கு முடங்கல் விடுக்க விழைந்தும் அஃது இன்றே நிறைவேறுவதாயிற்று. ''............இளைஞரை அன்புடன் வேண்டுவேன்; என்னுரை தவறெனில் என்னைத் திருத்துக'' என்ற தங்கள் கூற்றை முழு மனத்துடன் நம்பியே எங்கள் கருத்தைக் கூறுகின்றனம்.........

பகுத்தறிவுக்கு வித்திட்டவர் பெரியார் என்னில், அதைத் தம் சொல்லாற்றலால் பரவச் செய்து இன்றைய பெரும்பான்மைத் 'தென்மொழி' இளைஞர்களை உருவாக்கி விட்டவர் அறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அவர்கள் தோன்றி இலர் எனில் இன்று தமிழ் நாட்டில் சிறிதேனும் தலையெடுத்திருக்கும் பகுத்தறிவோ, தமிழ்ப்பற்றோ ஒரு போதும் தோன்றி வளர்ந்திரா என்பது எவரும் மறுக்கவொண்ணா உண்மை. இவ்வளவு சிறப்புக்குரியவரான அண்ணா அவர்களை, 'திண்ணையில் படுத்துத் திராவிடங் கேட்ட, அண்ணாத் துரைகள் அடங்கிய பின்னரும்'' என்று மிக இழிவு படுத்தித் தாங்கள் எழுதுவது எவ்வகையில் சரியென்றோ, முறையென்றோ தாங்கள் கருதுகின்றீர்கள் என்பது எங்களுக்கு விளங்காப் பெரு வியப்பாயுள்ளது. ஒன்றைத் தாங்கள் மீட்டும் ஒரு முறை நினைவுகூர விழைகின்றோம். அண்ணா அவர்கள் தமிழைப் போற்றினார். [அவர்க்குத் தமிழ் இலக்கண, இலக்கிய ஆய்வறிவு குறைவாக இருக்கலாம். அவரின் உணர்ச்சியே ஈண்டு கொள்ளத் தக்கது]; தாங்களும் அதைத் தான் செய்கின்றீர்கள். அண்ணா அவர்கள் மூட நம்பிக்கைகளைக் களைய முயன்றார்; தங்களின் கொள்கைகளில் அஃதும் ஒன்றே அண்ணா அவர்கள் ஆரியப் பார்ப்பனரின் சூழ்ச்சிக் கொடுமைகளை கிள்ளி எறிய அயராதுழைத்தார்; தங்களின் தலையாய கொள்கைகளில் ஒன்று தானே அது! அவரும் தனிநாடு [திராவிடம்] கோரினார்; தங்களுக்கும் தனித்தமிழ்நாடு காண்டல் கொள்கை. தங்கட்கும் அவர்க்கும் இறைப் பற்றில்தான்—நம்பிக்கையில்கூட அன்று, பற்றில்தான்கருத்து வேறுபாடு. அதும் குறைந்த அளவினதே ஆகும்.

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க)

தென்மொழி
இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 9: ஓலை: 2.

விடை. தி. பி. ௨௦௦௨ – (சூன் – 1971.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

வெட்கப்படவேண்டும், நாம்!

மொழி என்பது மாந்தனுக்கு மிக இன்றியமையாத ஓர் உயிர்ப்புக் கருவி. செப்பமற்ற மொழி நோய்வாய்ப்பட்ட மாந்தனைப் போல் நலிவுற்று, நாளடைவில் சிதைந்து மறைந்து போகின்றது. ஒரு மொழி வழக்கிலிருப்பதையே அதனுடைய வாழ்வென்றும், அது வழக்கற்றுப் போவதையே அதனுடைய வீழ்வென்றும் கூறுகின்றோம். வழக்கு இருவகைப்படும். உலக வழக்கு, நூல் வழக்கு என்பன அவை. ஒரு மொழியின் இவ்விரு வழக்குகளும் காலத்தாலும், இடத்தாலும், அறியாமையாலும், அக்கறையின்மையாலும் படிப்படியாகச் சிதைவுறுதலும் உண்டு. அக்கால், அம்மொழியிலுள்ள அறிஞர்களின் ஊக்கத்தாலும் உழைப்பாலும் வலிந்த அறிவு முயற்சியாலும் அந்நிலை மாற்றப் பெற்று, மொழியின் தன்மை முன்னையினும் வலிவுபெற்று

வருதலும் உண்டு. மக்கள் தம் வாழ்க்கைக் காலத்தில் இடையிடையே நோய்வாய்ப் படுதலும், பின் மருத்துவ முயற்சியால் அவ்வப் பொழுது செப்பமுறுதலும் போலவே, ஒரு மொழியின் மெலிவு வலிவு முயற்சிகளும் ஆகும். மருத்துவ முயற்சியின்றி எங்ஙன் மாந்தன் நலமுறுவதில்லையோ, அங்ஙனமே அறிவு முயற்சியின்றி மொழியும் நலமுறுவதில்லை. மாந்தரின் முயற்சி, முயற்சியின்மை என்பவற்றைப் பொறுத்தனவே யன்றி, ஒரு மொழியின் உயர்வும் தாழ்வும் தாமே அமைவதில்லை. ஒரு மொழியை எவரும் அழித்திட முடியாதென்று கூறுவது, அதை வழங்கி வரும் மக்களைப் பொறுத்த அளவில் பொருளுடையதாகலாமே யன்றி, அம் மொழியைப் பொறுத்த அளவில் பொருளுடைய கூற்றாகாது. எவ்வளவு வலிந்து சிறப்புற்றிருக்கும் ஒரு மொழியும் மக்களின் அறியாமையாலும் அக்கறையின்மையாலும் மாய்ந்தொழிவது உண்டு. மொழி வரலாற்றில் அதற்கு எத்தனையோ உவமைகளைக் காட்டலாம். எனவே ஒரு மொழி தன்னைத்தானே காத்துக்கொள்ளும் என்பதும், அதனை அழிக்க எவராலும் முடியாதென்பதும். ‘ஒருடல் தன்னைத் தானே காத்துக் கொள்ளும்’ என்பதையும், அதனை ‘அழித்திட எவராலும் முடியாது’ – என்பதையும் போன்ற அறியாமைக் கூற்றுகளே யாகும். மொழியறிவற்ற மூங்கைகளே அவ்வாறு கூறுவர். அறிஞர் முயற்சியின்றி எந்த ஒரு மொழியும் காப்பாற்றப் பெறுவதில்லை. அறிஞர்களின் முயற்சியால் மொழி காக்கப்பெற்று வழக்கூன்றுவதற்கு, ஆங்கிலமும் உருசியமும், அவர்களின் முயற்சியின்றி மொழி காக்கப் பெறாமல் வழக்கிழப்பதற்குச் சமற்கிருதமும் இலத்தீனும் நல்ல எடுத்துக் காட்டுகளாகும். உலகில் தற்பொழுது ஆங்கிலத்திற்கு அடுத்த படியாகப் பிரஞ்சு இருந்த இடத்தை உருசியம் கைப்பற்றி யிருப்பதாகப் புள்ளி விளத்தங்கள் கூறும்.

ஆங்கிலமும் உருசியமும் பரவலாக வழக்கூன்றியதற்கு அறிஞர்களின் முயற்சியே காரணியமாக விருந்தாலும், அம் முயற்சிக்கு அவ்வவ் வரசுகளும் அடிப்படைத் துணைகளாக இருந்து ஆட்சி வலிமையைக் கொடுத்திருப்பதை எவரும் மறுக்கவியலாது. அறிஞர்களின் முயற்சியிருந்து அரசுத்துணை இல்லாமல் இருப்பது, நல்ல விதைகளும் அவற்றை விதைத்து விளைவுகாணச் சிறந்த உழவர்களும் இருந்து, விதைப்பதற்குப் போதிய நிலமில்லாததைப் போன்றதாகும். சமற்கிருதமும் இலத்தீனும் வீழ்ச்சியுற்றதற்கான அடிப்படைக் காரணியமும் அதுவே. உலகத்தில் சிறந்தனவும் காலத்தால் முந்தித் தோன்றியனவுமான ஒருசில மொழிகளுள் சமற்கிருதமும் இலத்தீனும் உள்ளடங்கி யிருந்தும், அவை பரவலாக உலக வழக்கில் மேம்பட்டு

விளங்காமைக்குக் கரணியம் அம்மொழிகள் ஆட்சி வலிமை பெருமலிருந்ததே யாகும். இத்தகைய மொழிகள் நூல் வழக்கில் சிறந்து விளங்கினுலும், உலக வழக்கில் சிறப்புப் பெருமலிருப்பதால் காலப்போக்கில் வழக்கிழந்த மொழிகளாகக் கருதப்பெறுகின்றன.

உலகச் செம்மொழியாகிய நம் தமிழ்மொழியும், ஆட்சி வலிமை மிக்குற் றிருந்த காலத்தில். நூல் வழக்கோடு உலக வழக்கிலும் சிறப்புற்று விளங்கியிருந்ததும்; அவ்வலிமை குன்றத் தொடங்கிய காலத்திலிருந்து அதன் சிறப்பும் குன்றி வந்திருப்பதும் நாம் கருதிப் பார்க்க வேண்டிய உண்மைகளாகும். ஒரு மொழிக்கு நூல் வழக்கென்பது கிழங்கும், வேரும் போல்வதும், உலக வழக்கென்பது செடியும் மரமும் போல்வதுமாகும். தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் அதன் கிழங்கும், வேரும் மிகச் செழுமையும் கொழுமையும் வாய்ந்தனவாம். எனவே அவற்றின் அடிப்படையில் வளர்ந்த செடியோ, மரமோ அவ்வப்பொழுது தழையும் கிளையும் தரிக்கப் பெற்ருலும், மேலும் மேலும் துளிர்ப்பதும் வளர்வதுமாக வாழ்ந்து வருவன ஆகும். ஆனுலும் தமிழ் தன் ஆட்சி வலிமை முற்றும் இழந்ததாலேயே, இடைக் காலத்தில் பலவாறு சிதைவுறத் தொடங்கியது எனலாம். இக்கால் மீண்டும் அது தழைத்து வருவதற்குக் கரணியமும் அறிஞர்களின் முயற்சியும், அதற்கேற்பட்ட ஆட்சி வலிவுமே யாகும். சமற்கிருதம் உலகளவில் எவ்வளவு பரந்து பட்டுக் குமுகாய அளவிலும் சமய அளவிலும் எத்துணையளவு வேரூன்றி இருந்தாலும், ஆட்சியளவில் அது வலுப்பெருமல் நின்றதே, படிப் படியான அதன் வழக்கு வீழ்ச்சிக்கு அடிப்படைக் கரணியமாகும். ஆட்சி மொழியாக அம்மொழி என்றும் எவ்விடத்தும் இருந்ததாகத் தெரியவில்லை. ஒரு மொழியைப் பரந்துபட்டு வளரும் ஒரு கொடிக்கு உவமையாகச் சொன்னுல், அதற்கேற்படும் ஆட்சி வலிவை-அரசத் துணையை அதற்கான கொழுகொம்பாகவோ பந்தலாகவோ உருவகிக்கலாம். எவ்வகைப் பிடிப்புமின்றி ஒரு மொழிக் கொடி தரைமட்டத்திலேயே பரந்து வளர்வதில்லை.

இனி, மிகவும் வலுக் குறைந்ததும், குறுகிய ஓரிடத்தையே தன் உரிமையிடமாகக் கொண்டதுமாகிய ஆங்கிலம் தனக்குற்ற அரசு வலிமையால்,ஒட்டுண்ணி போல், பிறமொழிகளின் அறிவுச் சாரத்தை உறிஞ்சி வளர்ந்து, உலகத்தின் பெரும்பரப்பை யடைத்துக் கொண்டதுடன், அறிவியல் ஊட்ட மிக்கதாகவும் காணப் பெறுகிறது. ஒரு பொருள் எத்துணைச் சிறப்புடையதானுலும், பெருமை மிக்கதானுலும், அஃது ஆட்சிவலிமை யின்றிப் போகுமானுல், கள்ள மது விற்பனையைப்

போல் நலிவுற்றிருப்பதும், அதற்கு ஆட்சித் துணை சேருமானல் வெளிப்படையான அரசினரின் மதுக்கடைகளைப் போல் சிறப்புற்று விளங்குவதும் கண்கூடு. அதுபோலவே ஒருமொழிக்கான எத்துறை முயற்சியும் அரசு வலிமையின்றி அத்துணைச் சிறப்பெய்துதல் இயலாது.மொழிச் சிறப்பை யறியாத ஒருவனே, மொழிநலத்தைப் பேண விரும்பாத ஒருவனே ஆட்சித்தலைமையுறும் காலத்திலெல்லாம் ஒரு நாட்டின் மொழி சீரழிவதும், மொழியின் சிறப்பையும் வலிவையும் உணர்ந்தவன் அரசு வலிமை பெறுங் காலத்திலெல்லாம் அது சிறப்புற்றுவளர்வதும் வரலாற்று நிகழ்ச்சிகளாக விருந்து வந்திருக்கின்றன. 'தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்' என்னும் பாவேந்தர் கொள்கை வரியில், 'அறிந்த' என்னுமல் 'ஆய்ந்த' என்ற சொல்லைப் பெய்தமைக்கு ஆழ்ந்த பொருளுண்டு.

அரசுத்துணையிருந்தால் வழக்கு வீழ்ந்த மொழியையும் வழக்குக்குக் கொண்டு வந்துவிடமுடியும் என்பதற்கு இக்கால் சமற்கிருதத்திற்குக் கிடைத்து வரும் நடுவணரசுத் துணையே சான்ருகும். இந்தியா இன, மொழி, சமயச் சார்பற்ற நாடென்று கூறப்பெற்ருலும், ஆரிய இனமும், ஆரிய மொழியும், ஆரியச் சமயமும் வலுப்பெற்று வரும் ஓர் ஆரிய நாடாகவே வெளி நாட்டாராலும் கருதப்பெற்று வந்திருக்கின்றது; வருகிறது. எனவே வட நாட்டினர் அரசியல் நிலையில் எந்த 'இசம்' பேசினுலும் மொழி இனத்தைப் பொறுத்த மட்டில் ஆரியத்திற்கே சார்பாகவும், ஏன் – ஆரியர்களாகவுமே இருப்பதைப் பலமுறை எடுத்துக் காட்டியிருக்கின்ருேம். அரசியலைப் பொறுத்த மட்டில் இந்திரா காந்தியும் மொரார்சிதேசாயும் எதிரெதிராஞலும், மொழியையும் இனத்தையும் பொறுத்தமட்டில் இருவரின் மனமும் வாயும் ஒன்றையே நினைக்கும்; ஒன்றையே பேசும். ஆனல் தமிழனுக்குத்தான் அதிகாரம் கைக்கு வந்துவிட்டால் ஒருபேச்சு! கையை விட்டுப் போனல் ஒருபேச்சு! ஆரிய இனத்தில் மொழி, இனத்தைப் பொறுத்தவளவில் ஓர் எறும்பும் யானையும் ஒன்றே! ஏவலனும் காவலனும் ஒருவனே! தமிழனே தரையில் அமர்ந்தால் ஒரு வகையாகப் பார்ப்பான்; பேசுவான்! பாயில் அமர வைத்தால் ஒரு வகையாகப் பார்ப்பான்; பேசுவான்! பலகை யிட்டாலோ அவன் பார்வையும் மாறும்; பேச்சும் மாறும்! முக்காலி போட்டாலோ முகம் மாறி விடும்; நாற்காலியில் அமரவைத்தால் நாக்கு குழறும்; அரியணையில் அமர்த்தி விட்டாலோ அதிகாரச் செருக்கு அவன் மண்டையைக் குழப்பும்! ஆனல் வடவரைப் பொறுத்த மட்டில் இதற்கு நேர் மாருன நிலை. சமற்கிருத அறிஞன்

ஒருவன் ஓர் இடிந்த கோயிலின் பெயர்ந்த படிக்கட்டில் அமர்ந்திருந்தாலும் சரி, ஆட்சியாளர்கள் அவனைத் தேடிப் பிடித்துத் திருமுழுக்காட்டிப் பாடிப் பரவி, அவனிடம் உள்ள கைச்சரக்கை யெல்லாம் அவிழ்த்துப் போட்டுக் கடை பரப்பி விடுகின்றனர். மக்களெல்லாரும் அதிற் கொள்முதல் செய்வதைத்தவிர வேறு வழியில்லாமல் செய்து விடுகின்றனர். நம் தமிழகத்தைப் பொறுத்த வரையிலோ, தரையில் நின்று பேசினவன் பேச்சு, அரியணையில் அமர்த்தப் பெற்றவன் காதுகளில் என்றுமே பட்டதில்லை. எனவே நம் மொழியும் நாமும் சிறப்புறுவதற்கு இன்னும் சரியான வழி பிறக்கவில்லை என்றே சொல்லும்படி இருக்கின்றது.

சமற்கிருதத்தைப் பொறுத்த மட்டில் நடுவணரசு செய்யும் முயற்சிகளுக்கு வரைதுறையே இல்லை. நம் மாநில அரசு தமிழ்மொழிக்குச் செய்யும் முயற்சிக்கு வெட்கப்படும்படி நடுவணரசு பலபடி மேலேறிச் செய்கின்றது. இந்தியை ஆட்சி மொழியாகச் செய்வதில் அதன் புறமுயற்சி யிருந்தாலும், சமற்கிருதத்தை வலுப்படுத்துவதில்தான் அதன் அகமுயற்சியும் அதிகாரமும், பொதுமக்கள் பணமும் பெரிதும் ஈடுபடுத்தப் பெற்று வருகின்றன. "சமற்கிருத மொழியை ஒரு செத்த மொழி என்று கூறுவது அறியாமை யாகும்" என்று நடுவண் அமைச்சர்கள் வெளிப்படையாக இட்டுக் கட்டிப்பேசி வரத் தொடங்கியுள்ளனர். குடியரசுத் தலைவர்போகும் இடங்களிலெல்லாம், "சமற்கிருதமே இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கத் தகுதி வாய்ந்த"தென்றும், "அதை ஆட்சி மொழியாக்கி விட்டால், இந்தியாவில் மொழிச் சிக்கலே இல்லாது போய் விடும்" என்றும் வெளிப்படையாகவும் துணிந்தும் பேசி வருகின்றார். மொழிச் சார்பற்ற ஒரு நாட்டில் அவர் இப்படி வாயவிழ்ப்பாகப் பேசி வருவது, ஆரியச் சார்பினர் இந்தியாவை ஆரியமயமாக்குவதில் எத்துணைக் கருத்துடையவராக இருக்கின்றனர் என்பதை நன்கு புலப்படுத்துகின்றதா இல்லையா ?

நம் அரும்பெருந் தமிழ் மொழிக்கு நாமும் நம் அரசும் செய்து வரும் முயற்சிகளை யெல்லாம் முறியடிக்கும் படியும், வெட்கித் தலைகுனியும் படியும் சமற்கிருதத்திற்கு இக்கால் ஒரு முயற்சி செய்யப் பெற்று வருகின்றது. மொழிஞாயிறு பாவாணரின் அஃகியகன்ற அறிவைப் பயன்படுத்தி ஓரிலக்க உருபாயில் அமைந்த **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்** திட்டத்தையும் பிற நூற்கள் வெளிவரும் முயற்சியையும் துணைநின்று பேணிக் கொள்ளத் தெரியாதவாறு இற்றைத் தமிழக அரசு இருந்து வருகையில், மகாராட்டிர

அரசு ஒரு கோடி உருபாச் செலவில் சமற்கிருதத்திற்கு உலகளவில் பெரும் மதிப்பைத் தேடித்தரும் ஒரு மொழியியல் திட்டத்தைச் செயற் படுத்தத் தொடங்கியுள்ளது. உலகெங்கும் உள்ள சமற்கிருத அறிஞர்களை உள்ளடக்கியும், தக்கான் கல்லூரி பட்டப் பிற்கால ஆராய்ச்சிக் கழகத்தின் முன்னுள் இயக்குநரான பண்டாரகர் எசு.எம்.காத்ரே அவர்களைத் தலைவராகக் கொண்டும் ஒரு சமற்கிருத –ஆங்கில அகரமுதலியை உருவாக்கத் திட்டமிடப்பெற்றுள்ளது. அவ்வகர முதலி 15 முதல் 20 பாகங்கள் இருக்குமாம். ஒவ்வொரு பாகமும் 1000பக்கங்கள் கொண்டு விளங்குமாம். இத்திட்டத்தின்படி அவ்வகர முதலி 1986 – இல் முடிவடையுமாம். 1875 – இல் செரு மானியர்கள் இருவர் தொகுத்த அகரமுதலியில் 450 நூல்களே பயன் படுத்தப் பெற்றுள்ளனவாம். இப்பொழுது இவகள் உருவாக்கும் அகர முதலியில் 2000 நூற்கள் பயன் படுத்தப் பெறுமாம். இரிக்வேத காலம் முதல் சொற்கள் இடம் பெறுமாம். கி. மு. 1200க்கும் கி. பி. 1800க்கும் இடைப் பட்ட காலத்தில் பயன்படுத்தப் பெற்ற சொற் களுக்கு இவ்வகர முதலி பொருளுரைக்குமாம். ஏறத்தாழ 5,00,000 (ஐந்து இலக்கம்) சொற்களும், அவற்றுக்குரிய மூலங்கள், வேர்கள், அவற்றின் வரலாறு, வளப்பம் முதலியனவும் இதில் கூறப்பெறுமாம். இப்பெரிய திட்டத்திற்கு நடுவணரசும், மகாராட்டிர அரசும் நடுவ ணரசுச் சார்பில் உள்ள பல்கலைக் கழக நல்கைக் குழுவும், பூனு பல்கலைக் கழகமும் வேண்டிய வகையில் பொருளுதவி செய்யுமாம். இவ்வுதவிகளே யன்றி உலக ஒன்றியத்தின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் ஆண்டொன்றுக்கு 22,500 உருபா மேனி அத் திட்டத்தின் பதினைந்தாண்டுக் காலம் முடிவடைந்து அதன் வெளி யீட்டுக் காலம் முடிவுறும் வரையிலும் உதவுமாம்.

எப்படி ? – தமிழ் தமிழ் என்று நாம் அடித்துக் கொள்வதிலும், நம் அரசு இங்கொன்றும் அங்கொன்றுமாக, ஏதோ தன் பெருமையை நிலை நாட்டிக் கொள்ளும் வகையில் தமிழ் முன்னேற்றத்திற்கென ஓரிரண்டு செயல்களைச் செய்வதிலும், அவற்றிலேயே நிறைவடைந்து அதுசெய்யும் ஆர்ப்பாட்டத்திலும் எங்ஙன் தமிழ் வளர்ந்து விடமுடியும் ? இவற்றுல் மட்டுமே மேனுட்டார்க்குச் சரியான நிலையில் தமிழின் பெருமையை உணர்த்திக் காட்டி விடமுடியுமா? – என்பதை உண்மையான தமிழன்பர்கள் எண்ணிப் பார்க்குமாறு வேண்டிக் கொள்கின்றேன். எவர்கள் எப்படி எண்ணிக் கொண்டாலும் நாம் நம்மொழி நிலையில் செய்யும் முயற்சிகள் அனைத்தும் சிறிய அளவினவே ! நம்மை நாமே பாராட்டிக் கொள்வதால் மட்டுமே எந்த முடிவான பயனும் ஏற்பட்டு விடப் போவதில்லை. நமக்குள்

நாமே காழ்ப்புகளை வளர்த்துக் கொள்வதில் பயன்பெறப் போவது நம் எதிரிகளே! பரந்த உள்ளத்தோடும் நடுநிலை நோக்கோடும் சொல்லப்பெறும் கருத்துகளை அதே பரந்த உள்ளத்தோடும் நடுநிலை நோக்கோடும் கவனிக்க வேண்டுமேயல்லாமல் கட்சிக் கண்ணோட்டத்தோடு புறக்கணிப்பது மொழிக்கும் நல்லதில்லை; நம் எதிர்கால மக்களுக்கும் நல்லதில்லை. "**தென்மொழி**" அழுக்காறு கொண்டு இவற்றைச் சொல்கின்றது என்று அழுக்கு உள்ளத்தோடு கூறுவதில் பயனில்லை. கட்சி வெறியர்களுக்கு நம் கூற்றில் உள்ள உண்மை கசப்பாகத்தான் இருக்கும்! என்ன செய்வது?



கள்ளும் களியாட்டமும்!

தமிழகத்தில் மதுவிலக்கு எடுபட்டுவிட்டது. இது பற்றி எத்தனையோ கருத்துவேறுபாடுகள் உண்டு நம்மைப் பொறுத்த வரையில் மதுக் கொள்கையை ஓர் அரசியல் சிக்கலாகவோ பொருளியல் சிக்கலாகவோ ஆக்கிப் பார்ப்பதை விட, ஒரு பண்பாட்டுச் சிக்கலாகக் கருதிப்பார்க்க வேண்டும் என்றே கூறிக்கொள்ள விரும்புகின்றோம், அரசியலமைப்புக்கும் பொருளியலமைப்புக்கும் ஊதியமாக இருப்பவைஎல்லாம் குமுகாயத்துறைக்குப் பொருந்திவிடுவதில்லை,நமக்குள்ள அரசியல்,பொருளியல் சிக்கல்கள்யாவும் குமுகாய நலனைப் புறக்கணித்து விடுவனவாக அமைந்து விடக் கூடாது. மக்களுடைய அமைதிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் நாம் செய்யும் அரசியல் பொருளியல் மாற்றங்கள் கட்டியங் கூறி நிற்க வேண்டுமேயன்றி, அவற்றை அடியில் போட்டுப் புதைப்பனவாக அமைந்து விடாமல் நாம் பார்த்துக் கொள்ளுதலே அறிவுடைமையாகும்.

நம் பிள்ளை ஒருவன் நன்றாகப் படித்துப் பண்பாக வாழுவதையே நாம் எதிர்பார்ப்போம். 'கள்ளுக் கடை வைத்துப் பிழைத்துக் கொள்கின்றேன்' என்றோ, 'களியாட்டக் கூடம் அமைத்து வருவாயைத் தேடுகின்றேன்' என்றோ நம் மகனோ, நம் குடும்பத்தைச் சேர்ந்த பையன் ஒருவனோ கூறுவானானால் நாம் அவனைப் பாராட்டி ஊக்கி விட மாட்டோம். நம் குடும்பம் போன்றதுதான் மக்கள் கூட்டமும். நம் குடும்பத்திற்கு எப்படி பண்பாடு இருக்க வேண்டும் என்று நாம் கருதுகின்றோமோ, அப்படியேதான் நாம் சார்ந்திருக்கும் குமுகாயமும் பண்பட வேண்டும் என்று நாம் நினைக்க வேண்டும். நாம் கருதாமற் போனாலும் நமக்குற்ற ஒரு தலைவன் கருதுதல் வேண்டும். இந்த இடத்தில் தலைவன் என்று நாம் கருதுவது ஒரு கட்சிக்குத் தலைவனாக இருப்பவனை யன்று; நாம் வாழும் நாட்டுக்குத் தலைவனாக உள்ளவனையே.

மது வேண்டுமா வேண்டாவா என்பது பற்றித் தனிப்பட்ட பலர் பலவகையாகக் கருத்தறி விக்கலாம். அவர்களின் கருத்தை யெல்லாம் ஒரு மக்கள் கூட்டத்தின் கருத்தாகக் திணித்துக் கொண்டு விடமுடியாது. மது வேண்டும் என்பவன் வாங்கிக் குடித்துக் கொள்ளட்டும். ஆனால் வேண்டா என்பவனையும் குடிக்கத் தூண்டும் படியான ஒருநிலையை அரசினர் உருவாக்கித் தரத்தான் வேண்டுமா? ஏற்கனவே மது தேவையானவர்களுக்குக் கிடைத்துக் கொண்டுதான் இருந்தது. அது கிடைக்காமற் போகுமளவிற்கு வெளிநாட்டு இறக்குமதிப் பொருளன்று. அதைக் குடித்தால்தான் உயிர் வாழ முடியும் என்ற நிலையில் உள்ளவர்களை நாம் எங்ஙன் விலக்கிவிடக் கூடாதோ, அப்படியே அது வேண்டா என்பவரையும் நாம் அதன் வழியில் ஊக்கி விடவும் கூடாது. மதுக்குடி ஒரு தொத்துநோய் போன்றது. எல்லாரையும் அஃது எளிதே தொத்திக் கொள்ளும்படி கட்டவிழ்த்து விட்டு விடக்கூடாது என்பதே நமது கருத்து. கள் உடல் நலத்திற்கு ஏற்றதுதான் என்பர் சிலர்; ஆனால் அரசினர் இசைவு தந்திருப்பது கள் விற்பனைக்கு மட்டுமன்றே; காய்ச்சப் படும் பட்டைச் 'சாராயத்'திற்குந்தானே! இதுவும் உடலுக்கு நல்லது தானா? மேலும் உணவுப் பொருள்களிலேயே உடல் நலத்தைக் கருத்தில் கொள்ளாத வகையில் கலப்படங்கள் செய்யப் பெற்று வருகையில், இத்தகைய வெறிப் பொருள்கள் உடல் நலத்திற் குற்ற வகையில் மட்டுந்தானா கலப்படமின்றி விற்கப் பெறும்?

இனி, பெரும்பாலும் விலையுயர்ந்த மதுவைப் பணக்காரர்களே வாங்கிப் பருகுவர். விலையுயர்ந்திருப்பதால் அவர்கள் குடிக்கின்ற அளவும் சிறிதாகவே யிருக்கும். கள்ளுக்கும் 'சாராயத்'திற்கும் குறைவான விலையே யிருப்பதால் அவற்றை ஏழை மக்களே அளவிறந்து பயன்படுத்துவர். இதனால் அரசினர்க்கு வரும்படி மிகலாம். ஆனால் அத்தனைப் பணமும் ஏழைகளிடத்திலிருந்து பறிக்கப் பட்டதாகத்தான் இருக்குமே யன்றி, உறுதியாகப் பணக்காரர் களுடையதாக விருக்க முடியாது.

மேலும் இப்பொழுதே இசைத்தட்டு நாட்டியம் என்றும் பெயரில் ஒரு காட்டு விலங்காட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இனி வரும் மதிமயக்கத்தால் இக்கலை தெருக்கள்தோறும் பரவலாம். அந்நிலை நம் பண்பாட்டை எந்த அளவில் உறிஞ்சிக் கொழுக்குமோ? சொல்ல முடியாது. எப்படியோ கள்ளும் களியாட்டமும் ஏற்கனவே குலைந்துவரும் நம் நாட்டுப் பண்பாட்டை மேலும் பல படிகளுக்குக் கீழே தள்ளிவிடும் என்பது மட்டும் உறுதி! இதற்கு மேனாடுகளே சான்று. ஆனால் நாமும் மேனாட்டினரைப் போல் முன்னேறிக் கொண்டிருப்பதாகக் கருதிக் கொண்டு, நல்ல பண்பாடுகளைச் சிதைக்க முற்படுபவர்களை நாம் என்ன கூறித் திருத்தி விடமுடியும்? ஒருவேளை இப்படிக் கூறுபவர்களையே பண்பாடற்றவர்கள் என்று இவர்களும் சொல்லலாம்; இந்தக் காலமும் சொல்லாம். நாம் வியப்பதற்கில்லை.

— **பெருஞ்சித்திரன்.**

நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

(துரை-மாணிக்கம்)

பாட்டு. உஅ.

செம்பொன் மாணிழை விம்மத் தாங்கி
மும்முறை வணங்கி யெழுந்தனை யன்றே!
அற்றை நன்னாள் நினைவுகொளக் கூர்மதி!
ஒற்றைத் தனியை அல்லை;நின் அழுங்கல்
கொளல் சிறிது மின்றிநின் இளமகன், கொழுஞ்சுவை
வழுக்கை யுறிஞ்சிய முக்கட் கூந்தை
கழைநுதி பொருத்தி யுருள்கொடு வலந்தர
நீநின் செவித்துளை தாழக் குழைவாங்கி
நெய்சுவறிக் குழல்பறம்ப
மெய்பசந்து களையிழப்ப
உகுநீர் விழியோ டுள்ளங் கவலுதல்
தகுவதில் அம்ம! நின்கடை வாயில்
புகுவது முண்டே, அவட்புளித்த ஞான்றே!

பொழிப்பு: *செவ்விய பொன்னால் செய்யப் பெற்றதும் பெருமை மிக்கதும் ஆகிய அணியை, நின் உள்ளம் பெருமிதத்தால் விம்மும்படி உன் தலைதாழத்தாங்கி, அவனையும் அவன் பெற்றோரையும் நின் பெற்றோரையும் முறையாக அடிதொட்டு வணங்கி எழுந்தனை அல்லையோ? அந்த மன்றல் நன்னாளை நினைவிற் கொள்வாயாக. இன்று நீ ஒன்றியாய் விடப்பட்ட தனியை அல்லை; நின்னுடை வருத்தத்தைச் சிறிதும் உணர்ந்து கொள்ளலின்றி, நின் இளமகன், கொழுவிய நுங்கின் வழுக்கையை யுறிஞ்சி அம் மூன்று கண்களை யுடைய பனங்காயை மூங்கிலின் நுனியில் பொருத்திக் கொண்டு, நின் வாயிலை வலம் வருகின்றான். நீயோ, செவியின் துளை தாழும்படி அதன் குழைகளைக் களைந்து நீக்கி, நெய் சுவறிக் காய்ந்த நின் கூந்தல் காற்றில் பறந்து அலையுமாறு, மேனி பசப்புறக் களையிழந்து உகுக்கின்ற நீரையுடைய விழியோடு உள்ளங் கவலுறுதல் தக்கதில்லை அம்ம. அப்பரத்தை வாயிற்பட்ட நின்தலைவன் இனித்துக் கிடக்கும்*

அவள் தொடர்பு புளித்துப்போகும் பொழுதில் நின் இற்புற வாயில் வழிப் புகுந்து நின்னைப் போற்றுங் காலம் வரும்; அதுவரை அமைந் திருப்பையாகுக.

விரிப்பு : இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

தன்னை மணந்த கணவன் பரத்தை ஒருத்தியை நாடி நின்றதால் களையிழந்த ஒருத்தியை, அவன் வரவு விரைவில் வருமென்று தேற்றி யும், அதுவரை அமைந்திருக்க வேண்டியும் ஆற்றியதாகும் இப்பாட்டு.

இல்லற வொழுக்கம் திசைந்து மாறிய ஒருவன், தான் விரும்பிய பரத்தையின் தொடர்பு இனியதன்று; இன்னாதது என்று தானே அறியும் வரை அவனைத் திசை திருப்புதல் யாவர்க்கும் இயலாத தொன்றாகலினாலும், அவ்வாறு அவன் அறிந்து கொள்ளுதலும விரைந்து நடைபெறும் ஆகலினாலும், 'நீ வருந்தற்க; நின் அமைவே சிறந்தது' எனத் தலைவியைத் தோழி ஒருத்தி தேற்றி அவள் துயரை ஆற்றினாள் என்க.

'மணந்து கொண்டவள் நீயே ! நின் பெற்றோரும் அவன் பெற்றோரும் அவனும் மகிழுமாறு ஒப்பி ஏற்றுக்கொள்ளப் பெற்றவள் நீயே ! நீ இல்லற வாழ்க்கைக்குத் தக்கவள் என்பதை நினக்குற்ற மகப் பேற்றால் மெய்ப்பித்தனை. இந்நிலையில் அவன் நின்னைத் துறந்து பிறளொருத்தியை நாடுதல் அறமுமன்று; பண்புமன்று. ஆயினும் புறமயக்கம் ஒன்றே கருதி அவளை நாடிய அவன் உள்ளம் விரைவில் அவளின் கைப்புச் சுவையை உணர்வது கட்டாயம் நிகழும்; அதுவரை நீ ஆற்றியிரு' – என்று தோழி அறிவுறுத்தினாள் என்க.

செம்பொன் மாணிழை : செவ்விய பொன்னால் ஆகிய பெருமை மிக்க அணி. மாண் இழை. இழைத்துச் செய்தலால் அணி இழை எனப் பெற்றது.

பெண் ஒருத்தி அணிகின்ற அணிகள் யாவற்றிலும் அவள் மணவினைப் போதணியும் மங்கல அணியே அவளுக்குப் பெருமை தரும் அணியாகலின் அது மாணிழை எனப் பெற்றது.

இதனை முற்சுட்டிக் கூறியது 'நினக்கே அவன் உரியன்' என்பதை நினைவு கூர்தற்கென்க.

விம்மத் தாங்கி : நின் உள்ளம் பெருமிதத்தால் விம்மும் படி, நீ அதைக் குனிந்து ஏற்று.

அன்று நின் மங்கல வணியை இன்பத்தால் நெஞ்சு விம்மும்படி தாங்கிக் கொண்டனை. இன்றோ நீ துன்பத்தால் நெஞ்சு விம்மிப் பொருமும்படி துயரத்தைத் தாங்கிக் கொள் என்றபடி.

மும்முறை வணங்கி எழுந்தனை அன்றே! : அவனையும் அவனைப் பெற்றாரையும், நின்னைப் பெற்றாரையும் அந்த மண நாளில் நீ வணங்கி எழுந்தனை அல்லையோ !

'நீயும், அவன் தனியொருவன் இக்கால் விரும்பியவள்போல் வெறும் புறமயக்கிற் குற்றவள் அல்லள். அவனாலும் அவன் பெற்றோராலும், நின் பெற்றோராலும் ஏற்றுக் கொள்ளப் பெற்றவள்; அத்தகைய பெருமையுற்றது நின் மனம். எனவே அவன் புற வொழுக்கத்தை அவன் பெற்றோரோ நின் பெற்றோரோ ஏற்றுக் கொள்ளார். ஆகவே நீயே அவனுக்கு நிலையானவள். அதனால் ஆற்றியிரு' – என்று தோழி தேற்றுவாள்.

அற்றை நன்னாள் நினைவு கொளக் கூர்மதி : மணவினை நிகழ்ந்த அந்த இனிய நல்ல நாளை நினைவு கொண்டு ஆற்றி யிருப்பாயாக.

'அவன் நின்னைப்பிரிந்து புறத்தே ஒழுகிய துன்பந்தரும் இக்கொடிய நாட்களை நினைவு கூராதே! நின்னொடு அவன்வந்து பொருந்திய அந்த நல்ல நாளை நினைத்திடு. அதுதான் நீ என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டிய இனிய நாளாம். அதுதான் அவன்பால் நினக்குள்ள உரிமையினையும் வலிந்த பிணைப்பினையும் உறுதிப்படுத்திக் கொள்ளும் நாளாகும். எனவே அதனை நினை.' – என்றாள் என்க.

ஒற்றைத் தனியை அல்லை : நீ தனியொருத்தி அல்லை. நீ தனித்திருக்கின்றாய் என்று கருதிக் கொள்ளாதே. அவன் நின்பால் தொடர்பு கொண்டிருந்த பயனால் ஓர் இளமகன் நினக்குத் துணையாக உள்ளதை மறவாதே !

நின் அழுங்கல் கொளல் சிறிது மின்றி : நின் துயரத்தை ஒரு சிறிதும் கொள்ளுதல் இல்லாமல்.

'நீ நின் கணவன் பிரிவால் துன்பப்படுதல் போல், அவன் தன் தந்தையின் பிரிவால் துன்புறுதல் சிறிதும் இன்றி, நின் துணையால் அவன் மகிழ்ந்திருத்தல்போல், அவனது துணையால் நீ மகிழ்ந்திரு.' என்று அவன் மகனைக் காட்டி ஆற்றினுள் என்க.

கொழுஞ்சுவை வழுக்கை யுறிஞ்சிய முக்கட் கூந்தை : கொழுவிய சுவையை உடையதும், வழுக்கை போல்வது மாகிய நுங்கை யுறிஞ்சி யெடுத்த மூன்று கண்களை யுடைய பனங்காயை.

கழைநுதி பொருத்தி : மூங்கிற் கழையின் நுனியிலே பொருத்தியவாறு.

உருள்கொடு வலம் தர : உருட்டிக் கொண்டு சுற்றி வர.

'நீ நின் கணவனைப் பிரிகிலை; அவனே நின்னை விட்டுப் பிரிந்தான்; அதுவும் பரத்தை ஒருத்தியின் தொடர்பு கொண்டு பிரிந்தான். எனவே நீ வருந்துவதற்கு என்ன பொருட்டு இருக்கின்றது? வருந்தாதே! இதோ பார் நின் இளமகனை! அவனை விட்டுப் பிரிந்த அவன் தந்தையைப் பற்றிக் கவலுருது, அவனை விட்டு நீங்காத நின்னால் மகிழ்ந்து, கொழுவிய சுவையுடைய நுங்கை உறிஞ்சி விட்டுப் பிறர் எறிந்த பனங்காயை ஒரு கழியின் நுனியிலே பொருத்தியவாறு, அதனை உருட்டிக் கொண்டு சுற்றி வந்து விளையாடுகின்றான். அவன் உன் வருத்தத்தைக் கூடப் பொருட்படுத்தினான் இல்லை! அவன்போல் நீயும் மகிழ்ச்சியாக நின் இல்லறப் பணிகளில் ஈடுபடு; கவலையை மறந்திரு. அவன் வருவான்' என்று தோழி தலைவியைத் தேற்றினுள் என்க.

இனி, தலைவியின் துயரத்தை மாற்றுதற்கு, அவள் கணவன் ஒழுகும் பரத்தை யொழுக்கத்தின் தன்மையை உள்ளுறையாக வைத்துக் கூறுவாள், அவள் மகன் விளையாடும் பனங்காய் வண்டியையே ஓர் உவமமாகக் கூறினாள் என்க.

"இதோ! பார்; நின்மகன் ஓட்டித்திரியும் இப் பனங்காய் வண்டியை! கொழுவிய சுவையையுடைய நுங்கின் வழுக்கையைப் பிறர் உறிஞ்சிவிட்டுத் தெருவில் விட்டெறிந்த இவ்வெற்றுக் கூந்தையை அவன் ஒரு கழியின் நுனியில் பொருத்திக் கொண்டு, நின் துயரத்தைப் பொருட்படுத்தாது விளையாடுவது போல், கொழுவிய உள்ளீடு நிறைந்த பெண்மையைப் பிறர் முன்னரே

உறிஞ்சிவிட்டுப் புறம் வீசிய அப்பரத்தை உடலின் புறத்தோற்றத்தால் மயங்கி, அவன் பிரிவால் நீ வருந்துகின்றதையும் பொருட்படுத்தாது, அவளொடு சிறுபிள்ளைபோல் ஆடிக்களிக்கின்றான், நின் கணவன்; அவனுக்கும் அப்பரத்தைக்கும் உள்ள தொடர்பு, இச் சிறுவனுக்கும் அவன் ஒட்டித்திரியும் இவ்வெற்றுப் பனங்காய்க்கும் உள்ள தொடர்பு போன்றது. அவளொடு அவன் கொண்டிருக்கும் ஈடுபாடு, இச் சிறுவன் கையிலுள்ள மூங்கிற் கழியொடு பொருத்தப் பெற்ற அப் பனங்காயின் இணைப்புப் போல்வது. அம் மூங்கிற்கழி முறிந்து போகுங்கால் இச் சிறுவன் அப் பனங்காயை மீண்டுந் தெருவிலேயே விட்டெறிந்து விட்டு நின்பால் வருவதுபோல், அப் பரத்தையை இணைத்துத் திரிய உதவுவதாகிய நின் கணவனின் கைப் பொருள் முறிவுறுங்கால், அவளை மீண்டும் அங்கேயே வீசி விட்டு நின்னை நோக்கி வருவது உறுதி. அதுவரை அமைந்திரு'' என்றாள் என்க.

'வெற்றுப் பனங்காய் பொருத்தப் பெற்றிருப்பது மூங்கிற் கழியின் நுனியிற்றானே யன்றிக் கழியின் இடையில் அன்று. நுனியில் பொருத்தப் பெற்ற பனங்காயை விடுவிப்பது அவ்வளவு கடின மன்று. எனவே அவளொடு அவன் கொண்ட தொடர்பும் அவ்வளவு ஆழமானதன்று. ஒரு நுனியின் அளவே' – என்றாள்.

மேலும், கழி முறிவுறுங்கால், பனங்காய் தானே கழன்று கொள்வது போல், நின் கணவனின் கைப் பொருள் முறிவுறுங்கால் பரத்தையும் தானே கழன்று கொள்வாள்' என்று குறிப்பும் காட்டினாள் என்க.

'பனங்காய் கழலும் பொழுது தானே தூக்கி வீசி விட்டு நின்னைத் தேடிவரும் நின் இளமகன் போல, பரத்தை இவன் தொடர்பினின்று கைநெகிழ்க்கும் பொழுதில் நின்னைத்தேடி நின் கணவனும் வருதல் உறுதி' – என்றும் கூறினாள் என்க.

பெண்மை நலனுக்குக் கொழுவிய நுங்கும், பரத்தைக்கு அஃது உறிஞ்சியெடுக்கப் பெற்ற வெற்றுப் பனங்காயும், அவளொடு தொடர்பு கொள்ளுதல் முத்தொளைகள் உடையதும், பனங்காயைப் போன்றதும் ஆகிய ஒரு மண்டையோட்டொடு தொடர்பு கொள்ளுதல் போல்வதே என்பதும், அந்நிலையில் அவள் பார்வைக்கும் பேச்சுக்கும் பொருளில்லை என்பதும் குறிப்பால் உணரத்தக்கன,

நீ, நின் செவித்துளை தாழக் குழை வாங்கி : நீ, நின் செவித் துளைகள் தாழும்படி அதில் இட்ட குழைகளைக் கழற்றி நீக்கி.

செவியில் அணியப் பெற்றிருக்கும் ஒருவகை அணியாகிய குழைகளை நீக்குதலால் அதன் துளைகள் தாழ்ந்திருக்கின்றன.

இனி, தன்னைப் பிரிந்து பரத்திமையொழுக்கம் மேற்கொண்ட கணவனைப் பற்றிப் பிறர் தூற்றும் உரைகளை வணங்கிக் கேட்டுக் கொண்டாள் எனற்குச் 'செவித்துளை தாழ' என்றும் அதற்குத் தடையாக உள்ள குழைகளை நீக்கினுள் எனவே 'குழை வாங்கி' எனவும் பொருள் கொள்ளலாம்.

நெய்சுவறிக் குழல்பறம்ப : இட்ட நெய் காய்ந்து போய், இடா நெய்யால் கூந்தல் பறந்து சிதர்ந்தது.

மெய் பசந்து களை யிழப்ப : கணவற் பிரிவாலும் துயராலும் மேனி பசந்து களை யிழந்தது.

உகுநீர் விழியோடு உள்ளங் கவலுதல் : எப்பொழுதும் உகுக் கின்ற நீர் சுரக்கும் விழியினளாகி உள்ளத்தே அழுங்குதல்.

புறத்தே அழுங்குதல் போலிமை ஆகலின் உள்ளத்தே அழுங் கினுள் என்றதும், அவ்வழுங்கலை உகுநீர் விழி உறுதிப்படுத்தியது என்றதும் கவனிக்க.

தகுவதில் அம்ம! : தக்கதில்லை அம்ம !

'கணவன் வேறு வகையில் பிரிவுற்றுன் எனின் நீ வருந்துதல் தக்கதாகும். அவன் தீயொழுக்கத்தால் பிரிந்திருப்பதற்கு நீ வருந்துவது தக்கதில்லை. அவன் வருந்துவதே தக்கது' என்றுள்.

நின் கடைவாயில் புகுவதும் உண்டே, அவள் புளித்த ஞான்றே!: புறத்தோற்றத்தால் இனித்துள்ள அவள் தொடர்பு விரைவில் அகத் தோற்றம் புலப்படலால் அவனுக்குப் புளித்துப் போதல் உறுதி. அக்கால் அவன் நின் புறக்கடை வாயிலில் வந்து புகுவான்—என்றபடி.

'மிக்க இனிப்பான பொருள் விரைவில் புளித்துப் போவதுஉறுதி. நினக்கு ஒரு மகன் பிறந்தவுடன் நின் உடல் அவனுக்கு இனிப் பற்றதாகியது. எனவே உடல் இனிப்பு நாடி அவன் தீயொழுக்கம் மேற்கொண்டான். இனி, அவளுடைய உடல் இனிப்பதாயினும்

அவள் உள்ளம் புளிப்பதாகலின் அந்நிலை உணர்ந்து அவன் விரைவில் திரும்புவான். அக்கால் நீ வரவேற்காமலேயே அவன் நின் கடைவாயிலில் ஒரு திருடனைப் போல் புகுவான். நீ கவலற்க' என்றாள் என்க.

தீயொழுக்க முற்றவனாகலின் முன்வாயில் வழி வராது கடைவாயில் வழிப் புகுவான் என்றாள்.

இனி, 'புகுவான்' என்றதால் 'நீ வரவேற்கவேண்டியதில்லை' என்றாள் என்க.

இனி, 'மும்முறை வணங்கி யெழுந்தனை யன்றே' என்று முற்கூறியதால், அவனும் தன் தீயொழுக்கத்திற்கு வருந்தி, நாணுற்று, தன்னைப் பொறுத்தல் வேண்டி நின்பாலும், நின் பெற்றோர் பாலும், அவன் பெற்றோர் பாலும் வணங்கி எழுவான் என்றும் குறிப்புப் பொருள் புணர்த்திக் கொள்க.

ஒரு தோழமையின் கடமை, தன் அன்புக்குரியார் துன்புற்றவிடத்து அவரை அன்பால் அணுகி, அறிவால் தேற்றி, நேர்ந்த நிகழ்ச்சியை உலகியலறிவால் தேர்ந்து விளக்கி, அவர் துயரை மாற்றுவதே யாகலின் ஈண்டு தலைவிக்குற்ற மெய்த்தோழியும் அவளின் அகப்புறத் துயரை அணுகி ஆய்ந்து அத்துயர் விரைவில் மாறுவதே என்று ஓர் இறைச்சிப் பொருள் நிறை உவமத்தால் எடுத்து விளக்கியும், அவட்குத் துயர் விளைவித்தவர் நாணும்படி அவள் பெருமையுறுவது உறுதி என்று கூறியும் தேற்றினாள் என்பதை யுணர்த்துவதாகும் இப் பாடல்.

இது, பாலை யென் திணையும், தலைமகன் பரத்தை வாய்ப் பட்ட ஆயிடைப் பிரிவின் கண், தலைமகள் கவன்று கையறத் தோழி தேற்றியது என் துறையுமாம்.

மொழிப்பேரறிஞர். தேவநேயப் பாவாணரின்

திருக்குறள் தமிழ் மரபுரை

விலை உரு. 15-00

பிற வெளியீடுகளுக்கும் எழுதுக.

கிடைக்குமிடம்: திரு. தே. மணி,
ஆ-1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு (வ. ஆ.)

'தென்மொழி'க்கு நன்கொடை.

9-10-69 முதல் 17-12-69 முடிய, தென்மொழின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத்தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

	உரு.
மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப் புளியம்பட்டி.	5—00
திரு. மு இராமநாதன், தியாகராசர் கல்லூரி, மதுரை.	10—00
திரு. கந்தையா, வடிவேல் அரைவை ஆலை, இராசபாளையம்	1—00
திரு. முத்தரசு, தமிழாசிரியர், தளவாய்புரம்.	2—00
திரு பர். பொ இளங்கோ, உக்கரம்.கோவை மாவட்டம்.	25—00
திரு பி. இ. பரமசிவன், பெங்களூர்-5.	1—00
திரு. இரா. பாலகுருமூர்த்தி. பழைய ஆயக்குடி,	5—00
திருவாட்டி. இலக்குமி, ஆசிரியை, சித்தோடு.	1—00
திரு. இரா. ப. மகிழ்வழுதி, போடி மீனாட்சிபுரம்.	1—00
திரு. ஏ. இரெக்சு, வான்படை, 56. ஏ. பி. ஓ.	10—00
மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப் புளியம்பட்டி.	5--00
மலேசியா திரு. அன்பரசனுக்கும் செல்வி. பாகாயிக்கும் 28—10—69-இல் நிகழ்ந்த திருமணத்தின் நினைவாக	30—00
திரு. சீ. வைத்திலிங்கம், மடுக்கரை.	10—00
திரு இரா. பொன்னுசாமி, பி. எசு. பி. டி; வடசித்தூர்.	1—00
திரு. அ. இளங்கோ, செக்கசமுத்திரம்.	1—00
புலவர் திரு. இ. பழநிசாமி வடசித்தூர்.	1—00
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.	5—00
திரு. ப. இராமசாமி, குமாரபாளையம்.	1—00
திரு அன்பானந்தன், சிங்கப்பூர்-8.	15—00

சென்னை கிண்டி பொறியியற் கல்லூரி மாணவர்கள் :

திருவாளர்கள் :- சமால், ப.நா. பக்தவத்சலம், த.மு. சோமசேகரன், அ. தினகரன், மு. சிவராசு, கு. செயக்குமார், கனகசுந்தரன், ந. தேவதாசன், சி. சோமசுந்தரம், சு. செயக்குமார், கே.பாலச்சந்தர், கோட்டீசுவரன், இராமசுப்பிரமணியன் இரா. கேசவன், கலைச்செல்வன், வெங்கடசுப்பிரமணியன், இராமகிருட்டிணான், மு. சண்முகம், வ. அரவிந்தன், ஆதிகேசவன், தி. இராமசாமி, குப்புசாமி, சந்திரமௌலி, உலகநாதன், சு. ஞானரத்தினம், மூ. இலெ. குமார், தேவசகாயன், தியாகராசன், இராமமூர்த்தி, கிருட்டிணமூர்த்தி, ம. சீதர், ஆ. க. மோத்தி, சாமுவேல் மைக்கேல். க. சீனு, மா. செயராசு, வெ. இளங்கோ, க. ஆனந்தன், சந்திரசேகரன், அருளரசு, தேவராசன், சிவப்பிரகாசன் விசயகுமார், அரங்கநாதன், பீட்டர் பால் பாபு, சிதம்பரம், வெங்கடராமன், சப்பந்தன், பெயர் தெரியாதவர் (தலைக்கு ஓர் உருபா மேனி) (தொடரும்.) 48—00

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

'தென்மொழி'த் திட்டத் தேவநேயன் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

போலிகை யுருப்படிகள் (Specimen Articles)

5. பொறு.

(1) சொல்:- பொறு.

(2) சொல்வகை ;- (Part of Speech or word-class) — வினை – செயப்படுபொருள் குன்றா வினையும் (Transitive Verb) செயப்படுபொருள் குன்றிய வினையும் (Intransitive Verb).

(3) புடைபெயர்ச்சி :- (Conjugation) - 15-ஆவது வகை. பொறுக்கிறேன் (நி. கா), பொறுத்தேன் (இ. கா.), பொறுப்பேன் (எ. கா.).

(4) பொருளும் ஆட்சி மேற்கோளும் :- (Meanings and Illustrative Quotations)

செயற்பெயர் வடிவு ; (Gerundial form)

பொறு-த்தல், செ. குன்றா வி. 1. சுமத்தல், to bear, sustain. "சிவிகை பொறுத்தானோ டூர்ந்தா னிடை" (குறள். 37); "இசையிலா யாக்கை பொறுத்த நிலம்" (ஷி 239). 2. தாங்குதல், to prop, to support, ஆலத்து...நெடுஞ்சினை வீழ்பொறுத்தாங்கு (புறநா. 58), 3. அணிதல், to put on. "அம்மணி பொறுத்திரென் றறைந் தான்" (உபதேசகா. உருத்திராக்.44). 4. உடன் கொண்டிருத்தல், to continue, to possess, as one's own body. "பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன்" (திருவாச. 23:6). 5. துன்பம் பொறுத் தல், to endure, suffer. 6. குற்றம் பொறுத்தல், to bear with, to put up with. 7. இளக்காரங் கொடுத்தல், to indulge to allow. 8. மன்னித்தல், to excuse, forgive, pardon

"தம்மை யிகழ்வார்ப் பொறுத்தல் தலை" (குறள், 151). 9. பிறர் கருத்து வேறுபாட்டை அல்லது மத வேறுபாட்டைப் பொறுத்துக் கொள்ளுதல், to tolerate. 10 பொறுப்பு (உத்தரவாதம்) ஏற்றல், to take responsibility, to be accountable for. 11. காலந்தாழ்த்தல், to delay, to postpone. 12 உவமையாகப் பெறுதல், to be similar. "உலம்பொறுக்காத தோளாய்" (சீவக. 402). 13. அழுத்துதல், to press heavily, as a load.

செ. குன்றிய வி. 1. பொறுமையாயிருத்தல், to be patient, exercise forbearance. 2 வினையிடை நின்று கொள்ளுதல், to stop, waite, halt in doing anything. 3. விலை கொள்ளுதல், to cost, as an aritcle; to be spent or expended on. 4. தோணிதட்டிப்போதல், to run aground, as a vessel, to strand. 5. மாட்டிக்கொள்ளுதல், to become fixed, jammed, wedged in (W.). 6. கடமையாகச் சுமருதல், to devolve upon, as a duty, responsibility expense. 7. இணங்கியிருத்தல், to consent, yield, comply with. 8. மிகுந்திருத்தல், to be excessive. 9. கனத்தல், to be heavy, weighty.

ஏவலொருமை (Imperative singular)

சற்றே பொறு, Wait a little.

பெயரெச்சம் : (Adjectival Participle)

இ. கா. பெ. இது அவனைப் பொறுத்த கருமம் (காரியம்), This is devolved on him. பொறுத்த குடும்பம், a large, burdonsome family. பொறுத்த சுமை, load that presses heavily.

வினையெச்சம் : (Adverbial Participle)

இ. கா. வி. (Past Participle). இருநாள் பொறுத்துவா., Come after two days. நி. கா. வி. (Infinitive mood). அடிபொறுத்தாலும் வசவு பொறுக்க முடியாது. பொறுக்க உண்டுவிட்டான். He has eaten excessively. பொறுக்க மிதித்தல், To tread hard, with pressure.

செயற்பெயரும் தொழிற்பெயரும் : (Gerund and Verbal noun)

"சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே."
(வெற்றிவேற்கை, 32)

"சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே" (ஷி31)

குற்றம் பொறுக்கை பெரியோர் இயல்பு.

தொழிற் பண்புப்பெயர் : (Abstract noun).

பொறுப்பு, Responsibility (உத்தரவாதம், வ.),

பொறுப்பாளி A responsible person. பொறுப்புக்காரன் (யாழ். அக.) பொறுப்புள்ள பதவி, a responsible post. பொறுப்புள்ளவன், one in a responsible post or place of trust, a responsible man. பொறுப்பற்றவன், an irresponsible man. பொறுப்பற்ற தனம், irresponsibility, indifference to a trust.

பொறுமை, patience. பொறுமை, எ. ம. (neg) intolerance, envy, jelousy பொறுமைசாலி, Patient person. பொறுமைக்காரன், Patient man(W.). பொறுதி, forbearance, forgiveness.

தொழிலாகு பெயரும் அதன் திரிவுகளும் : (Metorymical verbal noun and its derivatives)

பொறை, பெ. 1. சுமை (பாரம்)· (திவா.) *"குழையு மிழையும் பொறையா"* (கலித். 90); Burden, load. 2 கனம், *"பொறை தந்தன காசொளிர் பூண்"* (கம்பரா. உயுத். அதிகா. 40); Weight, heaviness. 3. சூல் (கருப்பம்) Pregnancy (சூடா.). 4. சிறு குன்று, *"அறையும் பொறையும் மணந்த தலைய"* (புறநா. 118); Hillock. 5. மலை. *"நெடுமே பொறை மிசைய குறுங்காற் கொன்றை"* (ஐங்குறு. 430); Mountain. 6. ஞாலம் (பூமி. வ,) (பிங்.), *"பொறைதரத் திரண்ட தாரு"* (இரகு. தசரதன் சாப. 50); Earth. 7. துன்பந்தாங்குந் தன்மை, endurance, long suffering, 8. பொறுத்துக் கொள்ளும் தன்மை. *"வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை"* (குறள், 153); Forbearance. 9. அடக்கம். *"பொறையு நாணு நீங்கினர்"* (கம்பரா உயுத். மீட்சி.88); Modesty, meekness.

10. வலிமை. "போதகாதிபன் முதலைவாயிடைப் பொறை தளர்ந்து" (பாரத. ஆதி. வேத்திரகிய. 1); Strength, fortitude.

பொறை — பொற்றை, பெ. 1. கற்பாறை (திவ். திருச்சந். 52. வ்யா.; Rock. 2. சிறுமலை (பிங்.). "பொற்றைமால் வரைகளோவென் புயநெடும் பொருப்புமம்மா" (கம்பரா. உயுத். இலங்கை காண். 22); Hillock, mound. 3. மலை, (பிங்.) "பொற்றையுற் றெடுத்தான்" (தேவா. 1218:10); Mountain.

தூண்கள் மண்டபத்தைத் தாங்குவதுபோல் மலைகள் வான முகட்டைத் தாங்குகின்றன என்னும் பண்டைக் கருத்துப் பற்றி மலை பொறையெனப்பட்டது.

"Atlas .... [Atlas-antos (1) Greek god of the older family. who held up pillars of universe: (2) the mountain in Libya regarded as supporting the heavens]"

"Atlantic ... 1. Pertaininig to mount Atlas in Libya; hence applied to sea near western shore of Africa, & later to whole ocean between Europe and Africa on east & America on west. ... [f L. f. Gk Atlantikos f. ATLAS]" என்று எருதந்துறைச் சிற்றகரமுதலி (The Concise Oxford Dictionary) குறித்திருத்தல் காண்க.

பொறையன், பெ. 1. சுமப்பவன். "புன்னிலைப் பவத்துக் கெல்லாந் தானொரு பொறையனுகி" [உபதேசகா. சிவபுண். 344]; Bearer, sustainer. 2. மலையரசனுன சேரன். "யானைக் கடுமான் பொறைய" [புறநா. 53]; Cera king, as lord of the mountainous region in the Tamil country, 3 பொறுமைக்கும் பொறைக் குஞ் சிறந்த தருமபுத்திரன்; Dharmaputra, the eldest of the Pandavas, as embodiment of patience.

குறும்பொறை, பெ. சிறுமலை [பிங்], "வரையக நண்ணிக்குறும் பொறை நாடி" [பதிற்றுப். 74:7].

குறும் பொறை நாடன். முல்லைநிலத்தலைவன் [இறை. 1 : 18]; Chief of the sylvan or pastral tract

இரும்பொறை, பெ. சேரர் பட்டப் பெயர்களுள் ஒன்று (பதிற்றுப்.89:9). எ-டு: சேரமான் கணைக்காலிரும்பொறை; A title of the Cera kings.

பொறையாளன், பெ. 1. பொறுமைசாலி
2. தருமபுத்திரன் [பிங்.].

பொறையாட்டி. 1. பொறுமையுள்ளவள். "சுருங்கும் மருங்குற் பெரும்பொறை யாட்டியை"[திருக்கோவை, 353]; Patient woman. 2. காவு (பலி) கொடுக்கும் பூசாரிப் பெண். "கானப்பலி நேர்கடவுட் பொறையாட்டி வந்தாள்" (பெரியபு. கண்ணப். 65); Priestess who offers animals to god in sacrifice.

பொறையிலான், பெ. 1. பொறுமையில்லாதன், impatient person. 2. வேடன், savage hunter.

பொறைநிலை, பெ.மனத்தை ஒருவழிப்படுத்துதல் (தாரணை,வ.); Concentrated attention in Yogic meditation.

வினையாலணையும் பெயர்: (Participial noun or Appelative nite verb)

"பொறுத்தார் புவியாள்வர்" "பொறுத்தார் நாடாள்வர், பொங்கினர் காடாள்வர்" [பழமொழிகள்]. பசி பொறுக்காதவன் (எ. ம.), One who can not bear hunger.

கூட்டுச் சொல் : (Compound words)

எ - டு : இரும்பொறை, குறும்பொறை, நெடும்பொறை, பொறையிலான்.

இணைமொழி : (Words in Pairs)
எ-டு : அறையும் பொறையும், பெ.

தொடர்மொழி : (Phrase)
எ-டு ; பொறுப்பற்றதனம், பெ.

மரபுவழக்கு : (Idioms)

பொறுத்திரு-த்தல் செ. குன்றிய வினை. To waite patiently.

பொறுத்துக் கொள்-ளுதல் செ. குன்று வி. To bear with.

பொறுத்துப் போ-தல்; செ. குன்றி வி. 1. தோணிதட்டுதல், to run aground. 2. மாட்டிக் கொள்ளுதல், to be stuck or jammed in. செ. குன்றிய வி. தொடர்ந்து, பொறுத்தல், to continue, to tolerate.

பொறுப்புக்-கட்டு-தல், செ. குன்று வி. 1. பொறுப்பேற்றுதல் [உத்தரவாதப் படுத்துதல்], to put responsibility on. 2. ஈடுகாட்டுதல், to tender as security. 3. முற்றுவித்தல், to accomplish [W.].

பொறையிருந்தாற்று -தல்
செ. குன்று வி. துன்பம் பொறுத்தலைக் கடைப்பிடித்தல், to bear with patience "*பொறையிருந் தாற்றியென் னுயிரும்போற்றினேன்*" (கம்பரா. சுந்தர, உருக்காட்டு. 11). பொறையுயிர்-த்தல் செ. குன்றுவி. 1. மரக்கலம் சரக்கிறக்குதல், to be unloaded, as a vessel. 2. இளைப்பாறுமாறு சுமையிறக்குதல், to dis-burden and rest "*துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி*" (பொருந. 239). 3. மகப் பெறுதல். "*பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டில்*" (நன். 269, உரை); To be delivered of a child.

பிறவினை (Causal verb)

1. பொறுக்கவைக்கிறேன், பொறுக்கவைத்தேன், பொறுக்கவைப்பேன்.

பொறுக்கவை - த்தல், செ. குன்று வி. 1. சாரவைத்தல் to place, lean against. 2. மிகுசுமையேற்றுதல், to overload. 3. பொறுப்பேற்றுதல், to impose a duty or expense upon. 4. பொறுத்துக்கொள்ளச் செய்தல். to cause to bear. 5. தோணிதட்டச் செய்தல், to run aground, as a vessel.

2. பொறுப்பிக்கிறேன், பொறுப்பித்தேன், பொறுப்பிப்பேன்.

பொறுப்பி-த்தல், செ. குன்று வி. 1. சுமத்துதல், to cause to rest on. 2. முட்டுக்கொடுத்தல், to prop, to sustain (W). 3. பொறுக்குமாறு செய்தல். "*திருவடியைப் பொறுப்பிக்குமவள் தன்சொல்வழி வருமவனைப் பொறுப்பிக்கச்சொல்ல வேண்டாவிறே*"

(அஷ்டாதச. முமிட்சுப).to cause to bear 4. பொறுப்புக்கட்டுதல், to put responsibility on.

(5) மூலமும் திரிவும் (Origin and Derivation)
புல் > பொல் > பொரு > பொறு.

புல்லுதல் = பொருந்துதல். பொல்லுதல் = பொருந்துதல். பொருதல் = பொருந்துதல். பொறுத்தல் = பொருந்துதல், பொருந்தித்தாங்குதல், சுமத்தல்.

ஒ. நோ: முட்டுதல் = பொருந்துதல், பொருந்தித் தாங்குதல். முட்டுக்கொடுத்தல் என்பது தாங்குதல் அல்லது தாங்கவைத்தல் என்று பொருள்படுதல் காண்க.

(6) இனச்சொற்கள் (Cognates and allied words)

திரவிடம்:

மலையாளம்—பொறு(க்க), கன்னடம்—பொறு. குடகம்—பொரி, கோத்தவம்—பொர், துடவம்—பிர், துளுவம்—புதெ = சுமை, load, burden. கோண்டி—புகுத்தாறு = கனத்தல் to weigh heavily.

ஆரியம்:

OE, OS, OHG ber(an), E bear, ON ber(a), Goth bair(an) L fer(re), Gk pher(ein), Skt bhar. LL port(are), to carry. port என்பதினின்று திரிந்தவையே porter, portage, portable, portative முதலிய தனிச்சொற்களும், import, export; comport, deport, purport, rapport, report, support, முதலிய முன்னொட்டுப் பெற்ற சொற்களும் portfire, portfolio, portmanteau முதலிய கூட்டுச் சொற்களும்.

Bar அல்லது bhar என்னும் ஆரிய வேர்ச்சொல் பற்றி "For instance, the root bar or bhar particularly if we include the words derived from Latin ferre and adopted in English such as, for instance, fertile, far (barley), farina, barley-flower, reference, deference, conference, difference, inference, preference, transference, and

all the rest, would yield more than a hundred English words. We should not want therefore more than a hundred. such roots to account for 10,000 words in English."[p.26].

"Thus **birth** was originally **bhar**, to bear, **plus** a demonstrative element **ti**, in English **th** which localises the act of bearing here and there.

"The sanskrit **bi.bhar-mi** shows us the same root reduplicated, so as to express continuous aetion, and followed by mi as a personal demonstrative. **Bearing.I** comes to mean, I bear.

"The English, **bear-able** is a compound of **bear** with the Roman suffix **able**, the Latin **abilis**, which expresses fitness " [p 27]

என்று மாக்கசு முல்லர் தம் 'மொழிநூல் பற்றிய முச்சொற் பொழிவுகள்' (Three Lectures on the Science of Language) என்னும் பொத்தகத்தில் வரைந்திருப்பது கவனிக்கத்தக்கது

ஒருசில மேலை மொழி நூலாராய்ச்சியாளர் 'பிரதர்' [brother] என்னும் ஆங்கில முறைப் பெயரையும் bar [bear] என்னும் மூலத்தி னின்று திரித்து, குடும்பத்தைத் தாங்குபவர் என்று பொருட் காரணியங் கூறுகின்றனர். அஃதுண்மையாயின், பொறுத்தார் என்னும் தமிழ்ச்சொற்கு அஃது இனமாயிருக்கும்.

இனி, கி. பி. 10-ஆம் நூற்றுண்டினதான சீவகசிந்தாமணியில்,

"கருங்கடல் வளந்தரக் கரையும் பண்டியும்" [சீவக 63].

என்று, உய்த்தல் அல்லது ஏற்றிச் செல்லுதல் என்னும் பொருளில் ஆளப்பெற்றிருக்கும் கரைதல் என்னும் தூய தமிழ்ச் சொல், 'கேரி' [Carry] என்னும் ஆங்கிலச் சொல்லை ஒலியிலும் பொருளிலும் ஒத்திருப்பதும், ஆழ்ந்து கவனிக்கத்தக்கதே. கரை என்பது பழங்கன்னடத்திலும் கர என்னும் வடிவிலுள்ளது. ஆங்கில அகரமுதலிகள், Carry என்னும் சொல்லை வண்டியைக் குறிக்கும் 'கார்' [Car] என்பதனொடு தொடர்புபடுத்துகின்றன. ஆங்கிலர் வருகைக்கு ஆறு நூற்றுண்டிற்கு முற்பட்ட கரை என்னுஞ்சொல், ஆங்கிலத்தினின்று வந்திருக்க முடியாது.

ME & ONF carre F. L carrus, -um fourwheeled vehicle, f. Celt. karrom, . os OIr., O welsh karr, E car.

இங்ஙனம் நூற்றுக்கணக்கான அடிப்படை ஆரியச்சொற்கள் தமிழ்ச்சொற்களொடு ஒத்திருப்பதுடன் தமிழிலேயே வேர்களைக் கொண்டிருப்பதால், அவ்வொப்புமை தற்செயலாக நேர்ந்திருக்க முடியாது.

சிறப்புக் குறிப்பு :—

ஆரியத்தில் வழங்கும் தமிழ்ச்சொற்களுள் பொறு என்பதும் ஒன்று. மேலையாரியத்திலும் கீழையாரியத்திலும் வழங்கும் வடிவுகளை நோக்கின். தியூத்தானியக் குடும்பத்தைச் சேர்ந்த ஆங்கிலச் சொல் தமிழ்ச்சொற்கு மிக நெருக்கமாகவும், இலத்தீனச் சொல்லும் கிரேக்கச் சொல்லும் சற்றுத் திரிந்தும், சமற்கிருதச்சொல் மிகத் திரிந்தும் இருப்பதைக் காணலாம்.

ஒகரம் எகரமாகத்திரிவது இயல்பே. எ – டு: சொருகு–செருகு. அம்முறைப்படி பொறு என்பது ஆங்கிலத்திலும் இலத்தீனிலும் கிரேக்கத்திலும் ber, fer,pher எனத் திரிந்துள்ளது. சமற்கிருதத்தில் bhar என்று ஒகரம் அகரமாகத் திரிந்துள்ளதும் இயல்பேயாயினும், அஃது எடுப்பொலியும் மூச்சொலியும் கூடி மிகத் திரிந்துள்ளமை காண்க. அத்திரிபே கலவைத் தமிழில் பரி என வழங்குகின்றது.

Port என்னும் இலத்தீனச் சொல் பொறுத்தல் என்னும் தொழிற் பெயரினின்று திரிந்திருக்கலாம்.

திருத்தம் :—

சென்னை யகரமுதலியில், bhar என்னும் சமற்கிருதச் சொல்லொடு ஒப்புநோக்குமாறு ஏவி, அத்திரிபையே மூலம் போற் குறிப்பாகக் குறித்திருப்பது தவறுகும். ஆரியர் தமிழரின் ஏமாறிய தன்மையைப் பயன்படுத்தி, வடமொழியை மூலமாகவும் தென்மொழியை அதன் திரிவாகவும் கொண்டுள்ள கொள்கையின் விளைவு இது. ஆயிரக் கணக்கான வடசொற்கள் தென்சொற்களின் திரிபென்பதையும்,வடமொழியில் ஐந்திலிருபங்கு தமிழ் என்பதையும் செ. சொ. பி. அகரமுதலி தெள்ளத் தெளிவாகக் காட்டும். 0

சிலம்பில் காவுந்தி

(வை. பூ. சோமசுந்தரம், க. மு. அறி. இ., ஆ. ப.)

தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரம் ஓர் ஒப்பற்ற நூல். வரலாற்றுப் பாவியம், – குடிமக்கள் பாவியம், – மூவேந்தர் பாவியம்– இசைப் பாவியம் என்ற பல சிறப்புகள் சிலம்பிற்கு உண்டு. இத்தகு பாவியத்தில் வரும் கதைமாந்தர்களாகிய கோவலன், கண்ணகி, மாதவி என்பாரைப் பற்றிய பல திறனாய்வுகள் வெளிவந்துள்ளன. மூவேந்தர்களைப் பற்றிப் பட்டிமன்றங்களிலும் ஆராய்ந்துள்ளனர். பிற துணைப்படைப்பினரான காவுந்தி, தேவந்தி, மாதரி, மாமுது மறையோன் முதலியோரைப் பற்றியும் ஆய்தல் வேண்டும். இவருள் காவுந்தியடிகளின் படைப்பு நோக்கத்தை இக்கட்டுரையில் காண்போம்.

காவுந்தியடிகளை இளங்கோ படைத்தது ஏன்? இளங்கோ வடிகள் சமண சமயத்தைச் சிறப்பித்துக் கூறுவதற்காகச் சமண சமயத்துறவியான காவுந்தியடிகளைப் படைத்தார் என்பார் சிலர். இளங்கோ சமண சமயத்தினரானமையின் தம் சமயத்தைச் சிறப்புறச் செய்ய, சிலம்பில் காவுந்தியைப் படைத்தார் என்பது இவர் கருத்து.

இக்கருத்து ஆய்விற்குரியது. இளங்கோவடிகள் சமணசமயத் தார் என்று சிலம்பில் எங்கும் குறிப்பிடப் பெறவில்லை. இளங்கோ வடிகள் எல்லாச்சமயத்திற்கும் தக்க சிறப்பினைத் தம் நூலில் தந்திருக்கிறார். அவர் பாவியம் எழுதற்குரிய காரணமாகப் பாயிரத்தில் குறிப்பிடுவனவற்றுள் சமணத்திற்குரிய கருத்து எதுவும் இல்லை. மேலும், தமிழகத்தில் காணப்பெறும் பல்வகை யான கோயில்களையும், வழிபாட்டு முறைகளையும், படம்பிடித்துக் காட்டுகிறார். அந்த வகையில் காவுந்தி வருகிறார் என்று ஏன் கொள்ளக்கூடாது? அதுமட்டுமன்று; இளங்கோ சமணசமயத் தாராதலின் காவுந்தியைப் படைத்தார் என்று கோடுதல் பொருத்தமும் அன்று; இளங்கோவடிகட்குச் சிறப்பானதுமன்று. மேலும், இளங்கோ சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்ற கருத்தும் நிலவுகிறது. குறிப்பாக, உ. வே. சா. அவர்கள் இக்கருத்தினரே. அவர் தம் சிலப்பதிகாரப் பதிப்பின் முன்னுரையில், சேரன் செங்குட்டுவன் சைவன் என்றும் அதற்கு,

"நிலவுச்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி,
உலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி,
மறஞ்சேர் வஞ்சி மாலை யொடுபுனைந்
திறைஞ்சாச் சென்னி யிறைஞ்சி வலங்கொண்டு"

(கால்கோட்காதை - 54-7)

என்ற வரிகளும், பிறவும் சான்றுதம் என்றும், சேரன் செங்குட்டுவன் தம்பியே இளங்கோ ஆதலால், அவரும் சைவரே என்றும் வலியுறுத்துகிறார்.

இக் கூற்றினை வேறு தமிழறிஞர்கள் சிலரும் ஒப்புகின்றனர். இந்த அடிப்படையில் பார்த்தால் 'காவுந்தி படைப்பு' சமணசமயச் சார்பால் நிகழ்ந்தது என்ற கோட்பாடு பொருந்தாமற் போகிறது.

சமணச் சார்பால் காவுந்தி படைக்கப் பெற்றிலரெனின், வேறு என்ன நோக்கமாக இருந்திருக்கும்? கோவலனும், கண்ணகியும், 'வான்கண் விழியா' வைகறை யாமத்தில் வீட்டைவிட்டு, மதுரைமா நகர் செல்ல முனைகின்றனர். மதுரை எவ்வளவு தொலைவு? 'ஆறைங் காதம்' என்று கோவலனே குறிப்பிடுகிறான். அஃதாவது முந்நூறுகல் தொலைவு. கோவலன் முன்னதாக மதுரை சென்று பழக்கம் உடையவனாகத் தோற்றவில்லை! முதன்முறையாக இப்போது தான் மதுரை செல்கிறான். கண்ணகியோ வீட்டுலகமன்றி வேற்றுலகம் யாதும் அறிந்தவளல்லள். இவ்விருவரும் மதுரையை எவ்வாறு அடைந்தனர்? துணையாக வந்தவர் யார்? என்ற கேள்விகள் இயல்பானவையே! காவுந்தி யடிகளைக் கூறாமல், கோவலனும், கண்ணகியும், மதுரையை அடைந்தனர் என்று கூறியிருக்கலாம். அது சுருக்கமாக அமைந்திருக்கும்.

அவ்வாறு கூறியிருந்தால், நாடுகாண் காதை, காடுகாண் காதை, வேட்டுவவரி, புறஞ்சேரி இறுத்த காதை ஆகிய பகுதிகள் நூலில் இடம்பெற வாய்ப்பில்லாமல் போயிருக்கும். காவுந்தியைப் பார்த்திருக்க முடியாது. சமணத்துறவியர் தம் சமயப்பற்றினையும், வேட்டுவரின் இயல்புகளையும், அவர்தம் வழிபாட்டு முறைமையினையும் அறிய இடமில்லாது போயிருக்கும். ஆனால், பாவியத்தின் சிறப்பு கதைப்போக்கில் மட்டுமல்லாது, கதையுடன் இணைந்த பிறசெய்திகளின் விளக்கங்களிலும் அமைவது. ஆகவே,

கோவலனும், கண்ணகியும் மதுரையை அடைந்தனர் என்று சுருக்கமாகச் சொன்னால், எப்படி அடைந்தனர் என்று படிப்போருக்கு ஐயம் ஏற்படத்தான் செய்யும். அதனால் மதுரைச் செலவை விளக்கமாகவே காட்டுகிறார் இளங்கோ.

மதுரைக்கு வரும் வழியெல்லாம் கண்ணகி, கோவலன் துணை மட்டும் கொண்டு, வேறு துணையில்லாது வந்தாள் என்று கூறினால், படிப்போர் மனம் கவறலாம். ஆகவே, அவர்களுக்கு 'வழித்துணை' ஒன்று வேண்டும். வழித்துணையாக யாரைப் படைப்பது? ஓர் ஆடவரைப் படைத்தல், தனியளான கண்ணகிக்கு ஏற்புடையதாகாது. பெண்ணொருத்தியை வழித்துணைக்குப் படைக்கலாம். எத்தகைய பெண் அவ்வளவு தொலைவு நடந்து வருவாள்? ஒரு பெண்துறவிதான் வரலாம். குடும்பத்துப் பெண் தனியாக — பிறர்க்குத் துணையாக வருவது மரபில்லை. பெண்துறவி என்றால் எச்சமயத்துப் பெண்ணைப் படைப்பது? சமணம், பௌத்தம் இரண்டிலும் பெண்துறவியர் இருந்தனர். சமணத்துறவியை இளங்கோ படைத்தது ஏன்?

இளங்கோவடிகள் காலத்தில், புகார் நகரத்தில் பௌத்தம் பரவவில்லை. சமணமே பரவி இருந்தது. எனவே, சமணத் துறவியைப் படைக்க நேர்ந்தது.

ஆக, காவுந்தியடிகள் 'வழித்துணைக் காகவே' படைக்கப் பெற்றார் என்பதும், சமயச்சார்பினால் படைக்கப் பெற்றார் என்பது பொருந்தாது என்பதும் இதனால் உறுதியாகின்றன.

வழித்துணைக்காகச் சமண சமயத் துறவியான காவுந்தியை இளங்கோ படைத்தாலும், சமணத் துறவி ஒருத்தியின் இயல்பினையும், ஆற்றலையும், குறித்துச்செல்ல வேண்டுமல்லவா? துறவியாரின் குணவியல்பினை அப்படியே ஓவியமாகத் தீட்டி, அதிலும் நிறைவுபெறுகிறார் இளங்கோ.

காவுந்தியடிகள் மதுரைசெல் வழியில், பிற உயிர்கட்குத் தீங்கு செய்யாமல் போகவேண்டும் என்ற தம் சமயக் கருத்தை வலியுறுத்துகிறார்; மாமுதுமறையோன் கூறும் சமயக் கருத்தை, அயல் சமயக் கருத்தென ஒதுக்கி, தம் சமயத்தின் துணையாலேயே எல்லா உயர்வும் பெறலாமெனக் கூறுகிறார். கீழ்மக்களின் தீச்சொல் கேட்டு, வெகுள்வதைக் காண்கிறோம்.

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது"

என்ற திருவள்ளுவர் கூறும் சான்றோர் இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாக அமைகின்றார். கோவலன் - கண்ணகியை மாதரியிடம் அடைக்கலப் படுத்துகிறார். அடைக்கலப் பொருளைக் காப்பதின் சிறப்பை விளக்குகிறார். இறுதியில், கோவலன் கொலையுண்டமை கேட்டு, தாம் வழிகாட்ட கோவலன் மதுரை வந்தமையால்—மறைய நேர்ந்தது என்று எண்ணி, உயிர் துறக்கின்றார். உலகப் பற்றின் நீங்கிய துறவியின் நெஞ்சங்கூடக் கோவலன், கண்ணகி முடிவு கண்டு, துவண்டு விடுகிறது. அத்துணைச் சிறப்பாகப் படைப்பது இளங்கோவின் ஆற்றல். "மரங்கொல் தச்சன் கைவல் சிறுஅர், மழுவுடைக் காட்டகத்து" என்பது போல, இளங்கோவின் ஆற்றலே, காவுந்தியின் படைப்பில் சிறப்பினைத் தருகிறது.

ஆக, காவுந்தியடிகள் வழித்துணைக்காகப் படைக்கப் பெற்று, முழுமையாக ஆக்கப் பெற்ற ஒரு சிறந்த படைப்பு என்று கூறலாம்.

தென்மொழி கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு.
ஆண்டுக் கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	14 உருபா.
அரையாண்டுக் கட்டணம்:	5 உருபா.	6 உருபா.	7—50
தனிஇதழ்:	75 காசு.	காசு 90.	1—10

தமிழ்ச்சிட்டு கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

	உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு.
ஆண்டுக்கட்டணம் உருபா	3-00	6-00	4-00
தனியிதழ் "	0-25	0-50	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

பறை ஒன்று முழங்கியது!

பறை ஒன்று முழங்கியது — போர்ப்
பறை ஒன்று முழங்கியது !

''எத்திக்கும் புகழ்க்கொடி பட்டொளி வீசிட
ஏழ்கடல் சுட்டியே ஆண்ட தமிழினம்
நத்திப் பிழைத்திடும் நாய்களாய் ஆரியன்
நாறிய கால் நக்கி வாழுவ தோ''எனப்
பறை ஒன்று முழங்கியது — போர்ப்
பறை ஒன்று முழங்கியது !

''அன்று நின் பேரரி மாநிகர் பார்வையில்
அஞ்சியே நரிகளாய் எலிகளாய் ஓடிய
குன்றி மணிநிகர் வடவருக் கடிமையோ
குன்றம் நிகர்தமிழ் மாந்தனே நீ ? '' எனப்
பறை ஒன்று முழங்கியது — போர்ப்
பறை ஒன்று முழங்கியது !

''எத்தனை ஆண்டுகள் ஆரியக் காரிருள்
இருந்தனை ! சற்று நீ எண்ணினை யோ இதை ?
இத்தனைக் காலம் போ தும் ! தமி ழா இனி
எழுகுவை நின் இன விடுதலைக் கே'' எனப்
பறை ஒன்று முழங்கியது — போர்ப்
பறை ஒன்று முழங்கியது !

''இந்தியம் பேசியே தன்மதி கெட்டனை !
இருந்த சிற் றறிவிலும் விந்தியம் பேசினை !
செந்தமிழ் நாட்டினை எண்ணினை யோ ? அதன்
சீர்மிகு விடுதலை உள்ளினை யோ'' எனப்
பறை ஒன்று முழங்கியது — போர்ப்
பறை ஒன்று முழங்கியது !

''வாழ்வது புதியது; சாவது பழையது !
வண்டமிழ் மொழியினை இனத்தினை நாட்டினைச்
சூழ்பல தளைகளை நொறுக்கிட வம்மினோ
செந்தமிழ்ப் புலிகளே ! திந்திமி தீ''மெனப்
பறை ஒன்று முழங்கியது — போர்ப்
பறை ஒன்று முழங்கியது !

— இரணியன் —

கழக இலக்கியத்தில் மூட நம்பிக்கைகள்.

பேராசிரியை : ப. தாயம்மாள் அறவாணன் க. மு.

0· 1. மூட நம்பிக்கை [Superstition] என்ற சொல் போதிய பொருள் திணிவு இல்லாமலும், தெளிவற்ற முறையிலுமே வழங்கப் பட்டு வருகிறது. ஆதலால் நெகிழ்ச்சியற்ற முறையில் அதனை வரையறுக்க முடியாது.[1]. தவறான நம்பிக்கை, அடிப்படையற்ற பழக்கம் என்று வேண்டுமானால் ஓரளவு வரையறுத்துக் கொள்ளலாம். மூட நம்பிக்கை என்னும் சொற்றொடர், தமிழில் பொருட் செறிவோடு வழங்கத் தொடங்கியது மிகப் பிற்காலத்திலேயே. இதற்கு 'Superstition' என்ற ஆங்கிலச் சொல் இலத்தீன் சொல்லே. இச்சொல்லை வர்சில் என்ற இலத்தீன் இலக்கிய ஆசிரியர் பயன் படுத்தும்போது, பொருளற்றது (empty), அடிப்படையற்றது (groundless) என்ற பொருள்களிலேயே ஆளுகிறார். சில இடங் களில் நிலைபெற்ற மத எண்ணங்கள் (of well tried and long established religious ideas) என்றும் வழங்குகிறார். கிரேக்க மொழியில், மாந்த ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஆற்றல் கண்டு அஞ்சும் அச்சம் (fear of super-human ideas) என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. நிமித்தங்களை (omens) பல தெய்வ வணக் கங்களை. கண்ணோட்டங்களைக் (Polytheistic Views) கூட இச்சொல் அக்காலத்தில் உள்ளடக்கவில்லை. தமிழிலும் தற்காலத்தில் அடிக்கடி வழங்கப் பெறும் பொருளடக்கத்தோடு இச்சொல் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன் வழங்கப் பட்டதாகத் தெரிய வில்லை. 'கண்மூடிப் பழக்கம் மண்மூடிப் போக' எனும் இராமலிங்க அடிகளாரது சொல் கூட்டு மூட நம்பிக்கையை உட்கொண்டதாக இருக்கலாம்.

0· 2. அறிவியல் அடிப்படையில் கரணிய கருமம் காட்டி உண்மை என நிறுவ முடியாதவற்றைப் பொது மக்கள் உண்மை

---

1. Like many words having a derogabry sense "Superstition" is often bosely and vaguely used and is therefore not easy to define. " Encyclopeedia Britanica vol," 21 P.577.

களாக நம்பிப் போற்றுவதை மூட நம்பிக்கை என்று அழைக்கலாம். இவ்வரையறையைத் திட்டமான வரையறை என்று கூறுதற்கில்லை. எல்லா மூட நம்பிக்கைகளும் ஒரு காலத்தில் நம்பிக்கைகளாக இருந்தவைதாம். தற்காலத்திலும் நம்பிக்கைகளாக இருப்பவைதாம். இத்தகு நம்பிக்கைகள் எல்லா மக்களிடத்தும் உண்டு. உலகின் எப்பகுதியிலும் உண்டு.

0·3. ஆரியரிடத்து நிரம்ப மூட நம்பிக்கைகள் இருந்தன. இரிக் வேத காலத்துப் பூசாரிகள், கதிரவன், நிலவு, ஆறுகள். மரங்கள் இவற்றை நோக்கிப் பாடினார்கள் தாங்கள் பாடிப் பரவுவதை அவை கேட்கும்; தாம் வேண்டியவற்றைக் கொடுக்கும் என்று நம்பினார்கள். இத்தகு நம்பிக்கைகளை அறிஞர் மாக்சு முல்லர் (Max Muller) நன்கு ஆராய்ச்சி செய்திருக்கிறார். மேலே குறிப்பிட்ட நம்பிக்கைகளின் அளவிற்குத் தமிழர்தம் மூட நம்பிக்கை எல்லை, கடந்து போய்விடவில்லை [2] அவை அறிவியலை விட்டுச் சற்று விலகி இருந்தாலும் உலகியலை விட்டு முற்ற விலகிப் போய்விடவில்லை என்று 'இயற்கைக் காட்சியும் செய்யுளும்' (Landscape and Poetry) என்னும் நூல் குறிப்பிடுகிறது.[3]

0·4. கழகக் காலத் தமிழரின் அக வாழ்விலும் புற வாழ்விலும் மூட நம்பிக்கைகள் இருந்தன. அக வாழ்க்கைத்துறைத் தலைமை பெண்களிடம் இருந்தது. புற வாழ்க்கைத்துறைத் தலைமை ஆண்களிடமிருந்தது. கணவனது பிரிவு, வரவு, வாழ்க்கை ஓட்டத்தில் நேரும் நன்மை தீமை, விருந்தினர் வரவு-இவை ஆடவரைக் காட்டிலும் பெண்டிரை மிகுதியும் பீடித்தன. புற வாழ்க்கையில் புகழுக்காவும், போருக்காகவும், பொருளுக்காகவும், ஆடவர் உழைக்க வேண்டியிருந்தது. அவற்றை ஒட்டிச் சில நம்பிக்கைகளை அவர்கள் போற்றினர். தாம் நம்பும் நம்பிக்கைகளையும், அவற்றிற்குக் காரணியமான பொருள்கள் அவற்றின் அசைப்பு, ஒலிப்பு, வரவுக்கேற்ப நன்மை தருவன, தீமை தருவன என்று வேறுபடுத்தி இருந்தனர். அவர்களிடம் இடம் பெற்றிருந்த நம்பிக்கைகளை,

0·4·1. தெய்வம் தொடர்பானவை

---

2. Landscape and poetry-By S. Thaninayogam PP-69.
3. ஷை – P.70,71.

0·4·2. குறி (சகுனம்) அல்லது நிமித்தம் தொடர்பானவை,

0·4·3. கனவு தொடர்பானவை.

என மூன்று வகையாகப் பகுத்துக் கொள்ளலாம். இந்நம்பிக்கைகள், மாந்தர் வழி, பறவை வழி, விலங்கினம் வழி அமைந்து கிடந்தன. மாந்தரின் வரவு, செலவு, உறுப்பு அசைவு, இவற்றை வைத்தும், பறவைகளின் போக்கு ஒலிப்பு இவற்றை வைத்தும், விலங்கின் போக்கு, ஒலிப்பு இவற்றை வைத்தும் நம்பிக்கைகள் எழுந்தன.

1·0. தெய்வம் தொடர்பானவை :—

உயிரிலாப் பொருள்களிலும், இயற்கை நிகழ்ச்சிகளிலும் உயிரியக்கம் காணுகிற போக்கு (Animism), உயிரிலாப் போலி உருவ வழிபாட்டுப் போக்கு (Fetishism) பழந்தமிழரிடம் காணப் பட்டன. மரங்களை வணங்கி, சில மரங்களைக் குறிப்பிட்ட தெய்வங் களின் உறையுள் எனக் கருதும் மனநிலை இருந்திருக்கிறது.[4] பனை மடலை, இறைவனோடு தொடர்பு படுத்திப் பாடும் நற்றிணைப் பாட்டு(*303*)ம் ஆலமரத்தில் அமர்ந்து இருக்கும் இறைவனை, "ஆலமர் செல்வன்" எனப் போற்றிய மரபும் இக் கருத்தை உறுதிப் படுத்தும் சான்றுகள். மராம் என்னும் மரத்தில் கடவுள் உறைவதாக ஒரு பாட்டு அறிவிக்கின்றது. "மன்ற மராஅத்த பேஎயும் முதிர் கடவுள்" எனவரும் அப்பாட்டின் வரி. இம் மரக் கடவுள், கொடியார்களை ஒறுக்கும் என்ற நம்பிக்கையையும் கபிலரின் இப் பாட்டு காட்டுகிறது.

2·0. நிமித்தம் தொடர்பானவை :—

கழக இலக்கியத்தில் நிமித்த நம்பிக்கையைப் பற்றி நிரம்ப சான்றுகள் உள்ளன. எண்ணெய்க்குடம், வாள், அரிவாள், ஈட்டி முதலான கொலைக் கருவி, விறகுக் கட்டை இவை எதிர்ப்படல் தீ நிமித்தங்களாக இன்னும் கருதப்படுகின்றன. இவை எல்லாம் சாவுத் தொடர்பான பொருட்கள். சாவைக் கண்டு இயல்பாக அஞ்சும்

4. G.Subramaniya Pillai, "Tree worship and ophiolatry in the Tamilnad." Journal of Annamalai university- sity Vol. XII. P. 70.

மாந்தர் மனம் சாவை நினைவூட்டும் அடையாளப் பொருட்களைக் கண்டும் அஞ்சுகிறது. இவ்வச்சம் வெறுப்பாக மாறி, வெறுப்பே தீ நிமித்தம் – என உருவாக்கி ஒதுக்கி விடுகிறது. கைம்பெண் எதிர்ப் படல், ஒற்றைப் பார்ப்பனர் எதிர்ப்படல் முதலியனவும் தீ நிமித்தங் களாக வெறுக்கப்படுகின்றன. கைம்பெண் தோற்றம் துயரத்தையும், கணவனை இழந்து விட்ட இழப்பின் அவலத்தையும், குழுகாயம் தந்துவிட்ட தோற்றத்தையும் கண்டு பிறர் அந்நிலை நமக்கு வரக்கூடாது என அஞ்சிய அச்சமே தீ நிமித்தமாக உருக் கொண்டு விட்டது. ஒற்றைப் பார்ப்பனர் வரவை வெறுத்தல், துறவியின் வரவை வெறுத்தல் ஆகியனவும் ஒருவகை அச்சத்தின் பாற் பட்டவையே. இவ்வாறு அச்சமே (தீ) நிமித்தங்கட்கு அடிப் படையாக இருந்திருக்குமோ என்று கருதுதற் கிடமுண்டு.

2·1. நிமித்தங்கள் மாந்தர், பறவை, விலங்கு, மரம் ஆகிய வற்றை மையமாகக் கொண்டு எழுந்துள்ளன. இவற்றின் அடிப் படையில் எழும் தீ நிமித்தங்களைக் கண்டு அஞ்சும் அச்சமே சில இடங்களில் வேறுருவம் பெற்று விடுகிறது. தீ நிமித்தங்களைக் கண்டஞ்சுவோர், நன்னிமித்தம் நிகழ வேண்டும் என்றெதிர்பார்க்கி றார்கள். எதிர்பார்த்தது நிகழாத போது தாமாகவே சில நிமித்தங் களைச் செயற்கையாக உண்டாக்குகிறார்கள். இவ்வழக்கம் இன்னும் நாஞ்சில் நாட்டில் வழங்குகிறது. ஒருவர் ஊர்ச் செலவு புறப்படும் போது, அவர்தம் வீட்டாரையே தண்ணீர்க் குடத்தோடு அல்லது குழந்தையோடு (நன்னிமித்தத்திற்காக) எதிரே வரச்செய்வர். அச்சத்தினால் வளர்ந்த காப்பு இது. இதனைப் போன்ற மாந்தரின் வரவு-செலவை நிமித்தமாகக் காணும் மரபு கழக இலக்கியத்தில் காணப்படவில்லை.

3·0. கனவு தொடர்பானவை :—

கனவில் நிகழும் நிகழ்ச்சிகள் உண்மையாய் வருங்காலத்தில் நிகழும் என்றெதிர்பார்த்தார்கள். இரவில் காணும் காலத்திற்குத்தக நடக்கும் என்றெண்ணினர். இரவை முதற்கூறு, இரண்டாம் கூறு, மூன்றாம் கூறு, நான்காம் கூறு எனப்பகுத்து, முதற் கூற்றில் நிகழும் கனவு ஓராண்டிற்குள்ளும், இரண்டாம் கூற்றுக் கனவு எட்டுத் திங்கட்குள்ளும், மூன்றாம் கூற்றுக் கனவு மூத்திங்கட்

குள்ளும், நான்காம் கூற்றுக் கனவு பத்து நாட்கட் குள்ளும் பலிக்கும் என நம்பினர். [5]

3·1. வாய்ப்பல் நிலத்தில் வீழ்தல், எண்ணெய் ஆடல், ஆண் பன்றியில் ஏறிப்போதல், ஆடையைக் களைந்து நிற்றல், அமர்ந் திருக்கும் கட்டில் கவிழ்தல்போன்ற காட்சிகளைக் கனவில் காண லாகாது. காணின் தீமை விளையுமென்று புறப்பாட்டு ஒன்று[6] பேசுகிறது. இலக்கியக் கனவுகள் பெரும்பாலும் எதிர்கால நிகழ்ச் சியைக் குறிப்பாக உணர்த்துவனவாய் அமைக்கப் பட்டுள்ளன. கண்ணகி கனவும், கோவலன் கனவும்,கோப்பெருந்தேவியின் கனவும் இளங்கோவால் எதிர்காலக் கதை நிகழ்ச்சிக்கு முன்னோடிகளாகவே காட்டப்பட்டுள்ளன.

3·2. கனவுகள் எதிர்காலத்தில் உறுதியாய் நிகழவல்லன என்று முற்றும் அறிவியலால் நிறுவப்படும்வரை இவற்றை மூட நம்பிக்கை எனக் கூறல் பிழையன்று. கனவுகளையும் மூட நம்பிக்கை என்ற குறிப்பிலேயே கழக இலக்கியத்தை ஆராய்ந்த பர். ந. சுப்பிர மணியம் தம் 'கழக அரசியல்' (Sangam Polity) எனும் நூலில் காட்டுகின்றார்.[7]

4·0. தெய்வம், நிமித்தம், கனவு என மூன்று வகைகளில் மூட நம்பிக்கைகள் எழுந்தன. இவை எழ அடிப்படையாக அல்லது இவற்றை அறியக் கருவியாக இருப்பவற்றை இனி ஆராய்தல் வேண்டும். முன் குறிப்பிட்டபடி,

4·1. மாந்தரை மையமாக வைத்தெழுந்தவை.

4·2. பறவைகளை மையமாக வைத்தெழுந்தவை.

4·3. விலங்குகளை மையமாக வைத்தெழுந்தவை.

4·4. மரங்களை மையமாக வைத்தெழுந்தவை.

எனப் பகுத்துக் கொள்ளல் தகும்.

---

5. சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை. XV 95. 106.

6. புறநானூறு. 41-ஔவை துரைசாமி உரை.

7. Dr. N. Subramaniam, 'Sangam Polity'. P. 321.

4·1·0. மாந்தரை மையமாக வைத்தெழுந்தவை :—

'மிருச்ச கடிகம்' – எனும் வடமொழி நாடகத்தில் புத்தத் துறவி எதிர்ப்படல் தீ நிமித்தமாகக் குறிக்கப்படுகின்றது.[8] இது போன்ற நிமித்தக் குறிப்புகள் கழக இலக்கியத்தில் இல்லை. மாறாக மாந்தர் பேசும் இயற்கையான பேச்சு நன்னிமித்தமாகக் கொள்ளப்படுகிறது. இதனை நற்சொல் கேட்டல் என்றும்; விரிச்சி கேட்டல் என்றும் குறித்தனர்.

" திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப "

என வரும் நற்றிணைப் பா (40) இதனைக் காட்டும். நற்சொல்லை ஆவி வந்தாடும் தேவராட்டியிடம் கேட்டலும் உண்டு. நெல்லையும் முல்லை அரும்புகளையும் தூவி, கைதொழுது, தெய்வம் பரவி நின்று விரிச்சி கேட்பர்.

" .... நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய் கைதொழுது "
(முல்லைப்பாட்டு 8–11; 11,18)

" நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டிர் சொல்லும் நிரம்ப " (புறம் 280)

எனவரும் காட்டுக்கள் இச்செய்தியை உறுதிப் படுத்தும்.

4·1·1. புறப்பொருள் இலக்கணம் 'விரிச்சி' – எனத் தனித் துறையாகவே வைத்துப் போற்றுகிறது.[9] அகத்தும் புறத்தும் 'விரிச்சி' பெற்றிருந்த பெருமையை இவை தெளிவு படுத்தும்.

4·1·2. ஊர் மகளிர் பூக்கொய்யப் பூஞ்சாரலுக்குச் செல்வர். அங்கு பூத்துக் குலுங்கும் வேங்கை மரத்தின் அடிவாரத்தினின்று "புலி புலி" எனக் கூவுவர். அவ்வாறு கூவுகையில் வேங்கை மரக்கிளை தாழ்ந்து கொடுக்கும் என நம்பினர்கள் [அகநானூறு:48]

4·1·3. போர்க்களத்தில் விழுப்புண்பட்டு மடியும் மறவர் துறக்கம் பெறுவர்.

---

8. மண்ணியல் சிறுதேர். (மிருச்ச கடிகம்) அங்கம் VII.

9. புறப்பொருள் வெண்பாமாலை. பா. 264.

"நீளிலை எஃகம் அறுத்த உடம்பொடு வாரா உலகம் புகுதல்"
என்கின்றார் பரணர். பண்டைய வடமொழி இலக்கியங்களிலும் இத்தகு கருத்து காணப்படுகிறது. துரோண பருவத்தில் சக்கர முற்றுகையுள் (வியூகத்துள்) சிக்கி இறந்துபோன அபிமன்யுவின் தோழர்களை அமைதிப்படுத்தும் உதிட்டிரர், மறப்போர் செய்து மறச்சாவு எய்திய அவன் உறுதியாக இந்திர உலகத்திற்குச் சென்றிருத்தல் வேண்டும் என்கிறார். கிரேக்க, உரோம மக்களிடம் இத்தகு நமபிக்கை இருந்தது. போர்க்களத்தில் பங்கு பெற்று மடிவோர் துறக்கம் பெறுவர்; அல்லாதார் பெறமாட்டார் என்ற நம்பிக்கை இருந்திருத்தல் வேண்டும்.[10] இந்நம்பிக்கையின் அடிப்படையில் வேறு சில நம்பிக்கைகள் எழுந்தன. பிறந்த நிலையில் இறந்த குழந்தைகள், தசைப் பிண்டப் பிறப்புகள், நோய்வாய்ப் பட்டு இறப்போர்—ஆகியோர் களங் காணாமலேயே இறந்து விடுகிறார்கள். அதனால் அவர்கட்குத் துறக்கம் கிட்டுவதும் அரிதே. இந்நிலையில் அத்தகையோரை வாளால் வெட்டி விழுப்புண் உண்டாக்கி அடக்கம் செய்தனர். இவ்வாறு செய்தால் அவர்களும் துறக்கம் பெறுவர் என்ற மூட நம்பிக்கையே அடிப்படைக் காரணம். பைசாந்தியப் பேரரசுக் காலத்திலே பெலிபொரிசு என்ற புகழ் பூத்த தளபதியுடன் போர்க்களங்களுக்குச் சென்ற புரோகோப்பியாபு என்னும் வரலாற்று ஆசிரியன் (கி. பி. ஆறும் நூற்றாண்டு) எருளி என்ற செர்மானிய மக்களிடத்து இத்தகையதொரு வழக்கம் நிலவி யுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளான். எருளி குலத்தில் நோய் காரணமாக ஒருவன் இறக்குந்தறுவாயில் அவன் உறவினரில் ஒருவன் காதல் மறந்து அவன் பழி நீங்கும் பொருட்டுக் கத்தியால் குத்துவான். இது வல்லல்லா(மோட்சம்)விற்கு அவன் போக உதவி செய்வதாகும் என்கிறார் சாட்விக்

4·1·4. ஆடவர் மார்பில் விழுப்புண் பெறுவதைப் பெருமை யாகக்கருதினர். விழுப்புண் என்பதைப் பரிமேலழகர் முகத்திலும் மார்பிலும் பட்ட புண் என்று விளக்குகிறார். புறப்புண் பெறுவதைச் சிறுமையாகக் கருதினர். புறப்புண் பெற நேர்ந்தால் நாணினர். இந்த நாணம் மானமாயிற்று. "தன்னிலையில் தாழாமை; தாழ்வு

10. க. கைலாச பதி-ஒப்பிலக்கியம். பக். 117.

வந்துழி உயிர் வாழாமை"[11] மானத்தின் இலக்கணம் ஆதலின் புறப் புண்ணுக்கு நாணினோர் தம்மை வருத்தி அழித்துக் கொள்ளவும் தயங்கவில்லை. இத்தற்கொலை முயற்சியால் புறப்புண் பெற்ற பழி போய்விடும்; துறக்கம் கிட்டிவிடும் என்று அவர்கள் நம்பி இருக்க வேண்டும். சேரமான் பெருஞ்சேரலாதன், சோழன் கரிகாலனால் புறப்புண் பெற்று வடக்கிருந்து உயிர்விட்டான் என்று புறப்பாட்டு 65, 66 காட்டுகிறது. வடக்கிருத்தலால் வீடுபேறு கிட்டும் என நம்பியதும் ஒருவகை மூட நம்பிக்கையே.

4·1·5. இடக்கண், இடத்தோள் துடிப்பது பெண்டிர்க்கு நன்னிமித்தம் என்றும் வலக்கண், வலத்தோள் துடித்தல் ஆடவர்க்கு நன்னிமித்தம் என்றும் மாறித் துடித்தல் தீ நிமித்தம் என்றும் அன்றைய மக்கள் நம்பினர். [12]

4·2·0. பறவைகளை மையமாக வைத்தெழுந்தவை :—

பறவைகள் பறப்பதைக் கொண்டும் ஒலிப்பதைக் கொண்டும் சில நம்பிக்கைகள் வழங்கின. கிரேக்கர் உரோமானியரிடத்தும் இத்தகு நம்பிக்கைகள் இருந்தன. சில பறவைகளை, அவற்றின் ஒலியை நன்மையின் அறிகுறியாகவும் தீமையின் அறிகுறியாகவும் கொண்டிருந்தனர்.

4·2·1. காக்கை கரைவதை விருந்து வரும் நன்னிமித்தம் எனத் தமிழர் கருதினர். (குறுந்தொகை 210. ஐங்குறுநூறு 391) புறுக்கள் ஓயாமல் இரைவதை நன்னிமித்தமாக இசுப்பானிய மக்கள் போற்றினர். ஆந்தையின் அலறலைத் தீ நிமித்தமாகத் தமிழர் கருதினர் (புறம் 20). இதே நம்பிக்கை இன்னும் மேனாடுகளிலும் உள்ளது.'‘The screeching of the owl is a sign of mourning"[13] என்று வழங்குகின்றனர்.

4·2·2 பறவை, செல்லும் வழி இடையே பறந்து தீ நிமித்தம் காட்டும் என்பதைக் கீழ்வரும் புறப்பாட்டும் "நாளன்று போகிப்

11. திருக்குறள் பரிமேலழகர் உரை — 776.

12. கலித்தொகை. 101. சிலம்பு V 239.

13. Misfortunes always happen in a house where doves are kept:- Standard Dictionary of Folklore. P.1066.

புள்ளிடை தட்ப" – [புறம் 124] அச்சந் தருவனவாகிய பறவை களது குரலோசை தீமையைக் குறிக்கும் எனக் கீழ்வரும் குறிப்பும் *"அஞ்சுவரத் தகுந புள்ளுக் குரலியம்ப"* [புறம் 41] காட்டுகின்றன.

4· 2· 3. கரிக்குருவி பறந்து ஒலிக்குமானால் பகைவேந்தன் அழிவான் எனும் நம்பிக்கை இருந்ததை இலக்கியம் காட்டுவதோடு, மார்க்கோபோலோ என்ற வழிப்போகியும் இக்குறிப்பைச் சுட்டிச் செல்கின்றார்.[14] பறவைகளை மையமாகக் கொண்ட நம்பிக்கையை முல்லைப்பாட்டு 7 – 18 குறுந்தொகை 218 அகநானூறு 351 புற நானூறு 204 ஆகியன தெளிவாகக் காட்டுகின்றன.

4· 3· 0 விலங்குகளை மையமாக வைத்தெழுந்தவை :—

சிலப்பதிகாரத்தில் இமிலேறு எதிர்ப்படுவதைத் தீ நிமித்தமாகக் காட்டுகின்றார் இளங்கோ. பூனை, நரி வழிமறித்து ஓடுமானால் தீ நிமித்தம் என்று இக்காலத்தார் கருதுவர். கழுதை கத்துவது நன்னிமித்தமாகவும் நாய் அழுவது தீ நிமித்தமாகவும் கருதப்படு கின்றன. பல்லி, ஒலிப்பும், ஒலிக்கும் இடமும் கொண்டு நன்மை, தீமையைக் கணிக்கிறார்கள். பல்லி சொல்லுக்குப் பலன் எனத் தனிக் கலையாகவே போற்றப்படுகிறது. பல்லி ஆடவரின் தோழன். பெண் டிரின் பகைவன் எனுங் கருத்தில் பானிசு நாட்டில் ஒரு மூட நம்பிக்கை இன்னும் உள்ளது. 'The lizard is the friend of man and the enemy of woman" – என[15] வழங்குகிறது. கழக இலக்கியத்துள் பல்லியைப் பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது. ஏனைய விலங் குயிரினங்களைப் பற்றிய குறிப்பு, மிகக் குறைவாகவே உளது.

4· 3· 1. "இடக்கண் துடித்து, பல்லியும் பாங்கு ஒத்து இசைக்கு மானல் பிரிந்து சென்ற கணவர் வந்து விடுவார்" எனத் தலைவி

14. Marco Polo. "They also know the import of meeting with any particular bird or beast; for such Dmeus are regarded there more than by any people in the world" — K. A. N. Sastri. 'Foreign Notices. P. 170.

15. Standard Dictionary of Folklore. P. 1067.

நம்புவதாகக் கலித்தொகையும் (11) அகநானூறும் (19) காட்டு கின்றன.

4·3·2. பிரிந்து சென்ற தலைவனது வருகைக்கு ஏங்கி, தனிமை வெப்பத்தில் தவித்துக் கொண்டிருக்கும் தலைவி ஒரு கையைத் தன் கன்னத்தில் ஊன்றிக் கவன்று கொண்டிருக்கும் வேளையில் பல்லி ஒலித்ததாக ஒரு பாட்டு வருகின்றது [அகம் 381]

4·3·3. காடுறை தெய்வங்கட்குப் பலியிட்டுப் பரவும் வழக்கம் அன்றிருந்தது. ஆட்டுக் குட்டியை அறுத்துப் பலிகொடுத்தால் தெய்வ அருள் கிட்டும் என அக்கால மாந்தர் நம்பினர்.

மறிக்குரல் அறுத்து ....
வேற்றுப் பெருந்தெய்வம் பலவுடன் வாழ்த்தி

[குறுந் 263]

4·3·4. மகளுக்கு நோய் வந்துள்ளதாகத் தாய் ஐயுற்ற வேளையில், முருகனுக்கு வெறியாட்டு அயர்வாள். அப்போது ஆட்டுக் குட்டியைப் பலியிட்டுத் தெய்வத்தைப் பரவுவார்களாம். இவ்வாறு செய்தால் மகளுக்கு வந்த நோய் போய்விடும் என நம்பினர். "*சிறுமறி கொன்று இவள் நறுநுதல் நீவி*" எனக் குறுந்தொகையும் (362)

"*... ... ... அன்னை*
வெறியயர் வியன்களம் பொலிய ஏத்தி
மறியுயிர் வழங்கா அளவை"

என அகநானூறும் [242] இக்காட்சியைக் காட்டுகின்றன.

4·3·5. இவ்வாறு ஆட்டைப் பலியிடுவதோடு அன்றி ஆளையே பலியிடும் வழக்கமும் இருந்திருத்தல் கூடும். போருக்குச் செல்லுமுன் காளிதேவியை வேண்டிய மறவர்களில் சிலர், வெற்றி யுடன் திரும்பிய பின், தம் தலையையே அறுத்துத் தந்து வழிபா டாற்றியதாகக் கலிங்கத்துப் பரணி குறிக்கிறது.[16] இவ்வாறு தலை தந்து வழிபாடு ஆற்றிய மரபே பிற்காலத்திலும் தற்காலத்திலும் தலை முடியைத் தரும் மரபாகத் திரிந்து விட்டதோ என்று கருதற் கிடனுண்டு.

16. கலிங்கத்துப் பரணி—கோயில் பாடியது. 14, 15.

4·4·0. மரங்களை மையமாக வைத்தெழுந்தவை :

வேந்தன் படை திரட்டும் போதோ, படை எடுக்கும் போதோ உள்ள மரம் பசுமை தழைய தழைத்திருக்குமானால் வெற்றி கிட்டும்; பசுமைகுலைய உதிர்ந்திருக்குமானால் தோல்விகிட்டும் என்று நம்பினர். பதிற்றுப்பத்து 23, 40, 69 ஆம் பாடல்கள் இச்செய்தியைக் காட்டுகின்றன. "பெருமரத்து இலையின் நெடுங் கோடு வற்றல்" (புறம் 41) தீப்பற்றி எரியுமானால் அந்நாட்டுக்குத் தீங்கு என்று கருதினர்.

4·4·1. வேம்பின் இலையும் வெண்கடுகும் பேய்களின் வரவைத் தடுக்கும் எனப் பெண்டிர் நம்பி அவற்றைத் தம் தலையில் வைத்துக் கொண்டதோடு குழந்தைகளின் தலையிலும் வைத்துவிட்டார்கள். (புறம் 281.)

5·0· பண்டைத் தமிழரின் அக, புற வாழ்க்கையில் பல்வேறு நிலைகளில், பல வேறு நம்பிக்கைகள் இடம் பெற்றிருந்தன. அவை அறிவியலுக்குப் புறம்பானவைதாம். எனினும் உலகியலில் அவர்களது உழைப்பு வாழ்க்கையைப் பேரளவு அவை தடை செய்து நிற்கவில்லை. அக்காலத் தமிழரின் நம்பிக்கைகள் மிகப் பல; பரந்துபட்டவை. அவை தமிழரின் தொன்மையை ஒத்த பிற நாட்டாரோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பயிலப்படவேண்டும். அதனால் சில புதுக் கருத்துக்கள் தோன்றும். ஒப்பிலக்கிய ஆய்வில் அஃது ஓர் இன்றியமையாக் கட்டமாக இலங்கும். 0

நாடகக்கலை

(நாடகத் துறைக்கென்றே வெளிவரும் மாத இதழ்)

சிறப்பாசிரியர் :- ஆறு. அழகப்பன், M. A., M. Lt.

உறுப்பினர் கட்டணம்:—

ஆண்டுக் கட்டணம் உரு. 6—00

வாழ்நாள் கட்டணம் உரு. 100—00

கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :—

மேலாளர்,

நாடகக் கலை

202, சானி சான் கான் தெரு,

சென்னை-14.

வினையாலணையும் பெயர்.

பேரா. க. ப. அறவாணன், க. மு.

(இக்கட்டுரை திருச்சியில் நடைபெற்ற [சூன்-1971] இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தில் படிக்கப்பட்டது.)

0·0. பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகிய நான்கும் தமிழ்ச்சொல் வகைகள். இவற்றுள் பெயர்ச் சொல்லும், வினைச்சொல்லும் பழமையானவை. இடைச்சொல்லும், உரிச்சொல்லும் ஒரு காலத்தில் பெயராகவும், வினையாகவும் இருந்து தேய்ந்தவை. பெயரும், வினையும் கூட மொழித் தொடக்கக் காலத்தில் ஒன்ருகவே இருந்தவை.

மலர் — பூ (பெ)
மலர்ந்தது (வி)

விழி — கண் (பெ)
விழித்தது (வி)

சொல் — மொழி (பெ)
சொன்ஞன் (வி)

என்பனவும், அழ, புகழ், ஒலி, எண் போன்றனவும் பெயர்ப் பொருளை யும், வினைப் பொருளையும் ஒருசேரக் காட்டுவதினின்று மேற்கண்ட செய்தியை உய்த்துணர்ந்து உறுதிப்படுத்திக் கொள்ளலாம். வினை வடிவச் சொல்லையே கூட, தொல்காப்பியர் பெயர்ச்சொல்லாகக் கொண்டிருந்தார் என்பது சேனவரையர் கருத்தாகும். கொல்யானை என்ற வினைத்தொகையின் நிலைமொழியாகிய 'கொல்' எனுஞ் சொல்லை, பெயர்ச்சொல்லாகவே அவர் விளக்குகிருர்.[1] இது போன்ற மொழியமைப்பு இன்றும் ஓரசை மொழிகளில் இருப்பதாக அறிஞர் விட்டே கூறுகிருர்.[2] சீனமொழியில் 'த' என்ற சொல்லுக்கு உயர்ச்சி (Greatness) என்ற பெயர்ப்பொருளும், உயர்வாக்கு (to make great) என்ற வினைப் பொருளும் உண்டு.

0·1. மொழி வரலாற்றில் சுருங்கிய வகைகள், கால நீட்சியாலும் இலக்கணவாணர்களின் ஆய்வு மாட்சியாலும் பெருகுகின்றன.

---

1. சேனவரையம்: நூற்பா உரை: 415.
2. Language and the study of Language - By Whitney W. D. PP. 330.

தொல்காப்பியர் காலத்தில் வினையாலணையும் பெயரும், தொழிற் பெயரும் வெவ்வேறு வகையாகக் கருதப்படவில்லை. பின்பே அவை வழங்கப்பட்டுப் புதிய வரவாகச் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். வினையாலணையும் பெயர், தொழிற்பெயர் இரண்டையுமே வினைப் பெயர் என்ற பொதுச்சொல்லாலும், தொழிற்பெயர் என்ற பொதுச் சொல்லாலும் வழங்குகிறார் தொல்காப்பியர். வினையாலணையும் பெயரையும், தொழிற்பெயரையும் வேறுபடுத்தாமல் வழங்கியமை தொல்காப்பியர் காலத்தோடு நின்றுவிடவில்லை. அவ்வழக்கு உரையாசிரியர் காலம் வரை போற்றப்பட்டு வந்திருக்கிறது. தொல் காப்பியம் சொல்லதிகாரம் 71–ஆம் நூற்பாவுக்கு உரைவிளக்கம் கூறப் புகுந்த இளம்பூரணர்,

"காலம் தோன்றுதன உண்டல், தின்றல் என்பன. இவை அத்தொழில்மேல் நின்ற பெயர். இனிக் காலம் ஒட்டும் பெயராவன உண்டான், தின்றான் என்பன. இவை அத்தொழில் செய்வான்மேல் நின்ற பெயர்" என்பர்.

0·2. இரண்டையுமே தொழிற்பெயர் என்றழைக்கும் இளம் பூரணர், உண்டல் போன்றவற்றைக் காலம்தோன்றாத் தொழிற்பெயர் என்றும், உண்டான் போன்றவற்றைக் காலந்தோன்றுந் தொழிற் பெயர் என்றும் வேறுபடுத்திக் காட்டுகிறார். இரண்டிற்குந் தனித் தனிக் கலைச்சொற்களைப் பயன்படுத்தாமற்போனாலும், அவ்விரண்டிற் கும் உள்ள அடிப்படை வேறுபாட்டை எடுத்துக்காட்டுகிறார். தெய்வச்சிலையார் இதே நூற்பாவில் தொழிற்பெயரைத் தனிப்பெயர் வகையென்றும், வினையாலணையும் பெயரை ஒட்டுப்பெயர் வகை யென்றும் குறிப்பிடுகிறார். தொழிற்பெயர், செயலைக் குறிக்கும் (Verbal noun denotes action........[3]) வினையாலணையும் பெயர், செயல் இயற்றும் பொருளைக் குறிக்கும். (Conjugated noun denotes to the doer ....) என்பதே அடிப்படை வேறுபாடாகக் கொள்ளுதல் வேண்டும். இதனால், உரைகாரர் காலம் வரை தொழிற் பெயரும், வி. அ. பெயரும் பெயரின் இருநிலைகள் எனக் கருதப்பட்டு,

3. Verbal Nouns in Tamil Grammar - By Prof. Mu. Va Annamalai Uuiversity Linguistic Department Seminar–Volume. P. 1.

வந்தனவே தவிர, வெவ்வேருக வகை செய்யப்பட்டு வழங்கப்படவில்லை என அறியலாம்.

0·3. நன்னூலார் தாம் இருவகையாக வேறுபடுத்தி,சூத்திரமாக முதன் முதலில் எடுத்துக்காட்டினர். ஆனல் இரண்டையும் வேறுபடுத்துவதற்கு அவர் காட்டிய வேறுபாடு திட்பமானதாய் இல்லை.

"வினையின் பெயரே படர்க்கை; வினையால்
அணையும் பெயரே யாண்டும் ஆகும்"

வினையாலணையும் பெயர், என்ற கலைச்சொல்லை முதலாவதாக வழங்கியவரும் நன்னூலார் ஆகக்கூடும் தொழிற்பெயர் படர்க்கையில் மட்டுமே வரும்; வினையாலணையும் பெயர் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடங்களிலும் வரும் என்பது நன்னூலார் காட்டும் வேறுபாடு [4] இந்த விளக்கம், இலக்கிய வழக்காற்றில் நெருசாமல் இருக்குமா என்பது ஐயமே.

0·4. தொழிற்பெயர்	1)	தொழிலைக் காட்டும்
	2)	காலங் காட்டாது.
வி. அ. பெயர்	1)	கருத்தாவைக் காட்டும்
	2)	காலங் காட்டும்.

என்று வேறுபடுத்திக் கோடலே பொருத்தம்.

0·5. தொழிற்பெயரினின்று வினையாணையும் பெயரை வேறுபடுத்தி விட்டாலும் அது மொழியின் இலக்கணத்தில் இன்றியமையாத் தேவையா என்பதை ஆராய்தல் வேண்டும். இக்கட்டுரை ஆய்வுக்குப் பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், முத்தொள்ளாயிரம், பெரிய புராணம், நீதிநெறி விளக்கம் ஆகியவை எல்லையாகக் கொள்ளப்பட்டு ஆயப்படுகின்றது.

1·1. நான் சென்றவனைக் கண்டேன்.

இத்தொடரில்,

நான் — எழுவாய்
சென்றவன் — செயப்படுபொருள், வி. அ. பெயர்
ஐ — வேற்றுமை உருபு
கண்டேன் — பயனிலை.

4. நன்னூல் — பவணந்தியார்.

பெயர் காலங் காட்டாது. ஆனால் சென்றவன் என்ற வினையாலணையும் பெயரில் 'ற்' — இறந்தகால இடைநிலை தெளிவாக உள்ளது. ஆதலின் பெயரன்று. வினைச்சொல் வேற்றுமை ஏற்காது. ஆனால் இச்சொல் வேற்றுமை உருபு ஏற்பதால் வினையுமன்று, பெயருமன்று, வினையுமன்று. பெயர்க்குரிய வேற்றுமை உருபேற்றலைப் பெற்றிருப்பதால் பெயர்த்தன்மையும் பெற்றுள்ளது. வினைக்குரிய காலம் காட்டுவதால் வினைத்தன்மையும் பெற்றுள்ளது. வினையது இயல்பையும், பெயரது இயல்பையும் ஒருசேரப் பெற்றிருப்பதால் வினைப்பெயரென்றும் வி. அ. பெயரென்றும் வழங்கி வந்தனர். தாயும், தந்தையுமாய் இருக்கும் 'அர்த்தநாரீசுவரர்' வடிவைப் பார்த்து 'அம்மையப்பன்' என அழைப்பது போல, வினையும், பெயருமாய் இருக்கும் சொல்லை வி. அ. பெயர் எனக் குறித்தனராதல் வேண்டும். பெயர் வைப்புக்குரிய காரணம் மிகப்பொருந்தி இருக்கிறது.

1·2. வி. அ. பெயர்ச் சொற்கள் பகாப்பதங்கள் அல்ல. பகுபதங்களேயாகும்.[5]

எ–டு : சென்றவன் >

செந் — பகுதி
ற் — இடைநிலை
அ — சாரியை
அன் — விகுதி.

1·3. 'அவன்'-எனுஞ்சொல்லை அ + அன் என்று பிரிப்பதைக் காட்டிலும், 'அவன்' என்ற முழுச்சொல்லாய்ப் பிரித்தலே சிறப்பு.

செல் — பகுதி
ற் — இடைநிலை
அ — பெயரெச்ச விகுதி
அவன் — சுட்டுப் பெயர்
சென்ற + அவன் > சென்றவன்

1·4. தமிழில் நிலைமொழியிலும் வருமொழியிலும் அகர உயிர் நிற்குமானால் அது மும்முறையில் புணரும்.

5. நன்னூல்—சங்கரநமச்சிவாயர் உரை. நூற்பா. 132.

உடம்படு மெய் தோன்றிப் புணருதல் : (தொல். எழுத்து 141)

கற்ற + அறிஞர் > கற்றவறிஞர்

இரண்டுயிரும் சேர்ந்து நெட்டுயிராதல்: (தொல். எழுத்து. 312)

மர + அடி > மராடி

நிலைமொழி உயிர்கெடல் (தொல். எழுத்து 312)

(நன்னூல். உரை 155)

மக + அத்து > மகத்து.

புகழ்புரிந்த இல் (திருக்குறள்: 59) எனவரும் திருக்குறள் தொடர், புரிந்த + இல் > புரிந்தில் என்று தொகுத்தல் விகாரமாக அமைந்துள்ளதாகப் பரிமேலழகர் சுட்டிக்காட்டுவதால் நிலைமொழி அகரக்கேடு. தமிழ்மொழியின் இயல்பான மொழி வழக்கு என்றும் அறிந்து கொள்ளலாம். ஆதலால் சென்றவன் > சென்ற + அவன் என்பதில் நிலைமொழி அகரக்கேடு இயல்பானதே என்று கருதலாம். அங்ஙனம் கருதிக்கொள்ளின் சென்றவன் எனுஞ் சொல்லை சென்ற அவன் எனும் இருசொல்லாக்கி, சென்ற என்பதைப் பெயரெச்சமாகக் கொண்டு அவன் என்று கொண்டுமுடியுஞ் சொல்லை, சுட்டுப்பெயராக அடக்கிக் கொண்டு விடலாம்.

2. 1. சென்றவன் என்பதன்றிச் 'சென்றான்' என்பது போன்ற சொற்களும் வி. அ. பெயராய்க் குறிக்கப்படுவதுண்டு. உரைத்தாள் (சிலப்பு) கண்டார் (முத்தொள்.) விதிர்ப்பார் (நீதிநெறி) ஆகியன வி. அ. பெயர்களே. இவற்றையும் பெயரெச்ச, சுட்டுப் பெயர்களின் தொடர்ச்சிகளாகக் கொண்டு விட முடியும்.

அவன் > அன் > ஆன்
அவள் > அள் > ஆள்
அவர் > அர் > ஆர்

என நீளுகின்றன. வினைமுற்று விகுதிகளாகிய அன், ஆள், ஆர் என்பன அவன், அவள், அவர் என்பதன் திரிந்த வடிவங்களே என்று கூறுவர் டாக்டர் கால்டுவெல்.[6] ஆக, சென்றவன், உரைத்தவர், கண்டவர், விதிர்ப்பவர் எனும் வழக்குகளே நீண்டொலிக்கின்றன.

3 1. அஃறிணை ஒன்றன்பால் ஈற்றுச்சொற்கள் பெரும்பாலும்

6. ஒப்பியன் மொழிநூல்—தேவநேயப் பாவாணர். பக். 340.

திரியாமலே வழங்குகின்றன. அவற்றையும் பெயரெச்ச, சுட்டுப் பெயர்களின் தொடர்ச்சிகளாகக் கொண்டு விடலாம்.

உற்றது > உற்ற + அது

எனப் பிரித்துக் கொள்ளலாம்.

4. 1. அகர ஈற்று அஃறிணைப் பலவின்பால் விகுதி ஈற்று வி. அ. பெயர்களும் இருக்கின்றன.

என்ப (சிலம்பு)
இறைப்பு (நீதிநெறி)

இவை, என்ப + அவை, இறைப்ப + அவை எனப் பிரியும். 'அ' விகுதியை நன்னூலார் பன்மை விகுதியாகக் கூறுவர்.[7] அவை என்பதன் சுருக்கமே 'அ' எனலாம். தற்கால வழக்கில் செல்பவை, என்பவை, இறைப்பவை என வழங்கப்பெறும் வி. அ. பெயர்களே முற்கால இலக்கியத்தில் செல்ப, செய்ப என ஈறுகுன்றி வழங்குகின்றன. பொருநராற்றுப்படை[128]யில் வரும் வேண்டுப என்பதனையும் இவ்வகையில் வைத்தமைக்கலாம்.

சென்ற + அவன்–சென்றவன்–சென்றான்
+ அவள்–சென்றவள்–சென்றாள்
+ அவர்–சென்றவர்–சென்றார்
+ அது–சென்றது
+ அவை–சென்ற [செல்வ

என்று அமையும் என முடிவு செய்யலாம்.

5. 1. அடுத்து, அலந்தோர் (பத்துப்பாட்டு), பயந்தோர் (சிலம்பு), இறப்போர் (முத்தொள்) கற்றோர் (நீதிநெறி) எனவரும் ஓகார ஈற்றயல் வி. அ. பெயர்களை ஆராய்தல் வேண்டும். இதுவே பயந்தோர், பயந்தாய், பயந்தோன் எனவும் வழங்கும்.

5. 2. ன்,ள்,ர்,ய், என்ற மெய்யீறுகளை ஈறாகவும் ஆகாரத்தை ஈற்றயலாகவும் உடைய வினையாலணையும் பெயர்கள், ஓகார ஈற்றயலாகத் திரிந்து வழங்கப்படும். தொல்காப்பியம், சொல் 195, 211ஆம் நூற்பாக்களாலும் நன்னூல் 353 ஆம் நூற்பாவாலும் இச்செய்தி விளக்கமாகும்.[8] ஆதலால்

---

7. நன்னூல்—பவணந்தியார்.

8. தொல்காப்பியர் யகர மெய்யீற்றைச் சுட்டவில்லை. காரணம் யகர மெய்யீறு னகர மெய்யிற்றின் திரிபாகவே கருதுவர். நூ: 133.

பயந்த + அவர்
அவர் — ஆர்/ன்/ள்/ய்.
ஆர் — ஓர்/ள்/ய்

என்று அமைத்துக் கொள்ளல் தகும்.

5·3. 'வந்திர்' என்ற வழக்கு சிலப்பதிகாரம் கொலைக்களக் காதையில் [16-11] வருகிறது. வந்தீர்க்கு எனவரும் உருபேற்ற அச்சொல்லுக்கு வந்த உமக்கு என்று உரை எழுதுகிறார் அடியார்க்கு நல்லார். சிலப்பதிகாரத்தை மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்த டாக்டர். ச. வே சுப்பிரமணியம் 'வந்தீர்'எனத் தனியே பகுத்து, 'வந்த நீவிர்' எனப் பொருள் தருவதோடு இதனை வி. அ. பெயர் என்றுங் குறிக்கிறார்.[9] ஈகார ஈற்றயல் பெற்ற வி. அ. பெயர் மிக மிக அருகியே வழங்குகிறது. இத்தகு வழக்குகள் பிற்காலத்தில் பெரும்பாலும் விரவிக் காணப்படவில்லை. ஆதலின் இது நுணுகிய ஆராய்ச்சிக்கு உரியது.

மூவகையாக இதற்கு விடை காணலாம்.

5·3·2. ஆர் ஈற்று வி. அ. பெயர்கள் ஈர் ஈற்று வி. அ. பெயர்களாகத் திரிவதுண்டு. இச்செய்தி,

ஆரும் ஈரொடு சிவணும் [தொல். சொல். 138]
தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே (தொல். 139) என

வரும் தொல்காப்பிய நூற்பாக்களாலும், சேனாவரையர் உரையாலும் தெளிவாகிறது.

வந்த + அவர்
அவர் - அர்
அர் - ஆர்
ஆர் - ஈர்
∴ வந்த + ஈர் - வந்தீர்.

5·3·3. வந்த + ஈர் என்றே முதலில் பகுக்கலாம். ஈர் — முன்னிலை வினைமுற்று விகுதி. அன்றியும் கீழ்க்காணும் திராவிட

9. Descriptive Grammar of Cilappatikaram. P. 278.

மொழிகளில் 'ஈ' என்பதை அடியாகக் கொண்ட சொற்களே முன்னிலைப் பன்மையில் வழங்குகின்றன.[10]

துளுமொழியில் — ஈ
தெலுங்குமொழியில் — ஈவு
கோலமி மொழியில் — ஈன்
படகா ,, — ஈன்
க (Ga) ,, — ஈன்
க (Go) ,, — ஈம்மா
கூமொழியில் — ஈனு

முன்னிலைப் பன்மையிலும் 'ஈ' அடிவந்த சொற்கள் வழங்குகின்றன.

துளு — ஈரு
தெலுங்கு — ஈரு
கோலமி — ஈம்
கூ — ஈரு

நீ, நீர் என்பவற்றைக் காட்டிலும் 'ஈ' எனும் முன்னிலை அடிச் சொல்லே மிகத் தொன்மையானது.[11] பர். கால்டுவெல்லின் கருத்தும் இதை உறுதிப்படுத்தும். ஆக 'ஈர்' என்பதே வருமொழி எனக்கொள்ளின் வந்த > ஈர் (நீவிர்)என அமைத்துக் கொண்டு விடலாம்.

5·3·4. வந்தீர்க்கு எனவரும் பகுதிக்குச் சிறப்புரை எழுதும் அடியார்க்கு நல்லார் 'வந்தாய்' என்று வேறு பாடத்தையும் சுட்டிக் காட்டுகிருர். வந்தாய் என்பதே பாடமெனின் வந்தாள் என்பதன் திரிபான வி. அ. பெயர் என்று அடக்கிக் கொள்ளலாம்.

வந்த + அவள்
அவள் - அள்
அள் - ஆள்
ஆள் - ஆய்

என்று அமைத்துக் கொள்ளல் தகும்.

---

10. Dravidian Etymological Dictionary யை அடிப்படையாகக் கொண்டு திரட்டிய செய்தி.

11. "........I conclude that it is not radical and that we are to consider it more primitive than nii"— Dravidian comparative Grammar by Dr. Caldwell. P. 388. Edi. 1956.

6·1. வருவேம் (சிலம்பு), தொழுதேன் (முத்தொள்.) என்ற ஏகார ஈற்றயல் வி. அ. பெயர்கள் வழங்குகின்றன. எம், என்ற உருபேற்ற வடிவம் யாம் என்ற வடிவத்தின் திரிபு. என் என்பது யான் என்பதன் திரிபு. எம், என் என்பன எனத் திரிந்திருத்தல் வேண்டும். ஆக,

வரும் + (ஏம்) யாம்
வரும் + ஏன்-யான்
யாம் + எம் - ஏம்
யான் + என்-ஏன்

என்று அமைந்திருத்தல் வேண்டும்.

6·2. வினைமுற்று விகுதிகள் பெரும்பாலன மாற்றுப்பெயர்களின் (Pronouns) திரிந்த வடிவங்களே. அவன்/ள்/ர்-அன்/ள்/ர்-ஆன்/ள்/ர். பர். கால்டுவெல் கூறும் இக்கொள்கை ஏற்றுக் கொள்ளத் தகுந்ததே. என், ஏன், எம், ஏம் ஆகிய விகுதிகளும், யான் யாம் என்பனவற்றின் திரிபுகளே ஆகும்.

7·1. குறிஞ்சிப்பாட்டு 245-ஆம் வரியில் வரும் 'தீர்ந்தன்று' எனுஞ்சொல்லை வி. அ. பெயர் என்று குறிக்கின்றூர் பர். இராம சுந்தரம்.[12]

தீர்ந்த + அன்று

அன்று என்பது அது என்னும் பொருளில் நிற்கிறது. அவ்வாறு நிற்பது தமிழ் இலக்கிய வழக்கு. 'அன்றி' எனும் சொல்லை, அது, அவை என்ற பொருளில் தொல்காப்பியரும் ஆளுகிறூர்.[13] ஆதலால் தீர்ந்த என்பதைப் பெயரெச்சமாகவும், அன்று(அது) என்பதைச் சுட்டுப்பெயராகவும் கொண்டு விடுவதில் தடையேதுமில்லை.

8·1. இதுவரை, அகர, ஆகார, ஈகார, ஏகார, ஓகார ஈற்றயல் வி. அ. பெயர்கள் ஆராயப்பட்டன. தெரிநிலை வி. அ. பெயர், கு. வி. அ. பெயர் இரண்டிற்கும் இக்கொள்கையையே அமைத்துக் கொள்ளலாம்.

---

12. Grammatical study of pattu pattu-unpublished Ph. D. Thesis By. Dr. RM. Sundaram PP. 62,64.

13. தொல்காப்பியம்: 'அன்றி அனைத்தும் பெயர்ப்பயனிலையே' எனவரும் முதல் வேற்றுமை நூற்பாவில் அன்றி என்ற சொல்லுக்கு அவை என்றே பொருளமைதல் காண்க.

சென்ற + அவள்-சென்றவள்/ள்/ர்.
சென்ற + அவன்-ஆன்-சென்ருன்/ள்/ர்.
சென்ற + அவன்-ஆன்-ஒன்-சென்ரோன்/ள்/ர்
சென்ற + அவர்-ஆர்-ஈர்-சென்றீர்
சென்ற + யாம்-எம்-ஏம்-சென்றேம்
சென்ற + யான்-என்-ஏன்-சென்றேன்.
சென்ற + அது-சென்றது.
சென்ற + அவை-சென்றவை.
சென்ற + அன்று(அது)-சென்றன்று.

இவற்றுள் நிலைமொழி அனைத்தும் பெயரெச்சங்களாய் உள்ளன. வருமொழி அனைத்தும் மாற்றுப்பெயர்களாய் உள்ளன. சுட்டுப் பெயர்களைக் கொண்டு முடிவன ஆதலின் பெயரெச்சங்களாயின. இவ்வாறு பகுத்துவிடின் பெயரெச்சம் காலம் காட்டும்; காட்டுகின்றது. பெயர்கள்தாம் வேற்றுமை ஏற்கும்; ஏற்கின்றன. வேற்றுமை உருபேற்பது பெயரின் இலக்கணம் எனக் கூறிவிட்டு, வி. அ. பெயர் மட்டும் விலக்கு என்று விதியில் நெகிழ்ச்சி அமைக்க வேண்டுவதில்லை.

8·2. தமிழில் உள்ள வி. அ. பெயர் என்ற தனி அமைப்பு, சமற்கிருதம் ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் இல்லை. தொன்மை இலக்கணப் பேராசானாகிய தொல்காப்பியனும் தனித்தெடுத்துப் பேசவில்லை.

8·3. வி. அ. பெயர் என வழங்கப்படுவனவற்றில் நிலைமொழிகளைப் பெயரெச்ச இயலிலும், வருமொழிகளைப் பெயரியலிலும் அமைத்துக் கொண்டால் வி. அ. பெயர் எனும் தனிப்பகுப்பை வற்புறுத்த வேண்டியதில்லை. 0

பாவலர். பெருஞ்சித்திரனாரின்
அரிய தமிழ் நூல்கள்

			உரு. காசு.
1.	பாவியக்கொத்து	விலை	2 — 50
2.	எண்சுவை எண்பது	,,	1 — 50
3.	புரட்சிப்பாவலர் பாரதிதாசன்	,,	0 — 50
4.	ஐயை	,,	1 — 00
5.	கற்பனை ஊற்று	,,	2 — 50

அஞ்சற் செலவு தனி

கிடைக்குமிடம் :- தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

செ. சொ. பி. பேரகரமுதலி

உருவாக்க, வெளியீட்டுத் திட்டம்

உறுப்பினர் பட்டியல்.

திருவாளர்கள்:— 1. தாமரை பெருஞ்சித்திரன், *கடலூர்–1.* 2. மா. பூங்குன்றன், *கடலூர்–1.* 3. புலவர். இறைக்குருவன், *மதுரை–10.* 4. இறை. பொற்கொடி, *மதுரை–10.* 5. காளியப்பன் (*நாராயணன்*) *நெய்வேலி–1.* 6 செ.பன்னீர்ச்செல்வம், *சென்னை-2.* 7. த. வளங்கோ, *புதுவை–1,* 8. செ. சித்தார்த்தன், அறி. இ. (பி. எசி.) *சென்னை–25.* 9. கி.மகிழ்கோ, *புதுவை–5.* 10. திருநாவுக்கரசு, பொ. இ. *வேலூர்-9.*

11. புலவர். சா. அடல் எழிலன், *திருவையாறு.* 12. ந. முத்துக்குமரன், அறி. இ. ஆ. ப., *குளத்துப்பாளையம்.* 13. திருச்சி மாவட்டத்தான். 14. ந. செங்குட்டுவன், *திருச்சி–14.* 15. அருண்மொழியன், *திருச்சி-14.* 16. வே. நா. பொற்செழியன், (வே. நா. இரேணுகோபால், *பெங்களூர்-1.* 17. உணர்வுப்பித்தன், (ஆ.சொக்கலிங்கம்) *திருச்சி-10.* 18. உளங்கவரழகன், *இராசிபுரம்.* 19. நாவை-சிவம் (தமிழ்மகன்) *கீரனூர்.* 20. ச. கலியமூர்த்தி. *காவேரிநகர்.*

21. வே. மாறன். *பெங்களூர்-21* 22. சி. பூ. மணி, *பெங்களூர்-21* 23. க. அப்பாத்துரை. *நடுப்பட்டி.* 24. ச. சின்னத்துரை, *நெய்வேலி-1.* 25. அன்புவாணன் (த. கோவிந்தன்) *நெய்வேலி-1* 26. அ. அருள்நெறி. *நெய்வேலி-2.* 27. ஆ. கருப்பையா, *நெய்-வேலி-3.* இரா. அப்பாவு, *நெய்வேலி-3* 29. இரா. பெருந்தேவன், *நெய்வேலி-2.* 30. மு. அறவாழி, *நெய்வேலி-1.*

31. பொன்–தமிழ்மாறன் (இராமசாமி) *நெய்வேலி-1.* 32. தமிழநம்பி, *அறங்கண்டநல்லூர்* 33. புலவர் பா. வீரப்பன், *ஆனைமலை.* 34. நா. இளமாறன், *பெகும்பகல்லாக்குடியிருப்பு.* 35. க. மலர்ச்செல்வன், (தனராசன்) *மதுரை-1.* 36. பர். பொ. இளங்கோ, *உக்கரம்.* 37. செ. பெரியநாடார், *தெற்குச்சூரன்குடி.* 38. சே. கு. அரசங்கோவன், *மேட்டூர் அணை-1.* 39. ஞா. தாமசு, *மணிமுத்தாறு.* 40. கே. பூபதி, *பெங்களூர்-16.*

41. துரை.சம்பத்குமார், க. இ., *ஈரோடு-1,* 42. அறவாழி. *தளவாய்ப்பட்டணம்.* 43. இல. க. இரத்தினவேல். *திருச்சிராப்பள்ளி.* 44. சு. திருஞானம், *திருச்சிராப்பள்ளி-1.* 45. ஆம்பூர்.

கே. ஏ. மணவாளன்; பெங்களூர்-5. 46. இர. பரணன், பரணம். 47. மு. வ. பரமசிவம், நடுப்பட்டி. 48. ம. சோசு, உத்தமபாளையம் 40. மு. திருநாவுக்கரசு, அண்ணுமலைநகர். 50. க. இராமசாமி, கோவில்பட்டி.

51. ஓ. பிச்சை, தெற்குத்தெரு மேலூர். 52. இல. வேலரங்கன், சோமையனூர். 53. கெம்பீரம், பெங்களூர்-1. 54. செ. பெருமாள், கடத்தூர். 55. புலவர். வ. அரிஅரன், ஒண்டிப்புதூர். 56. ந.தேவராசன், வேலூர்-1. 57. க.செகநாதன் பி.எசி.,ஈரோடு. 58. செ. இராசமாணிக்கம், காரைக்குறிச்சிப்புதூர்: 20. வெ.கிழார் பெங்களூர்-21. 60. சா. பொழிலன், நெய்வேலி-2.

61. கா. சே. சாத்தப்பப் பிள்ளை, பி. எசி. பி. டி. ஆமூர். 62. புலவர் கா. இளமுருகன், புன்செய்ப்புளியம்பட்டி. 63. ப. கு. முருகவேள், புன்செய்ப்புளியம்பட்டி. 64. புலவர் ந. அருணன் எரங்காட்டுப்பாளையம். 65. பா. அறவாழி, சென்னை-7. 66. அ. வெள்ளிமலையார், திருச்சிராப்பள்ளி-8. 67. சாலை. இளந்திரையன், எம். ஏ. எம். லிட். புதிய தில்லி-5. 68. செ. வெற்றிவேந்தன் (செயராசன்) நீலமலைத்தோட்டம் – இராசிபுரம். 69. முல்லைவாணன், சிங்கை. 70. ந. இராசகோபாலன், தஞ்சாவூர்.

71. அகத்திகிருட்டிணன் இ. அ. (வேளாண்) சோளிங்கபுரம் 72. ஏ. கே. மணி, பி.இ எ., எசு.எசு, 1. பெங்களூர்-38 73. வே. ஐயனப்பிள்ளை, வேம்பனூர்: 74. வ. கௌரிநாதன், திருச்சி-14. 75. எழிலரசன், திருச்சி-14. 76. பொன்-தங்கவேலன், பெங்களூர்-15. 77. தி. எழிலரசன் (இரமணி), மதுரை–3. 78. பொன்மாறன் (இராமகிருட்டிணன்) மதுரை-3. 79. மறை. நித்தலின்பன், கோவை-12. 80. தமிழ்க்கூத்தன், கருந்திட்டைக்குடி.

81. புலவர் ச. தமிழ்வேலன், மீனுட்சிபுரம். 82. அ. இளங்கோ பி. எசி. பி. டி. பெருமாம்பாளையம். 83. புலவர் த. மாணிக்கம் கூடலூர். 84. புலவர் திரு. மாரி விசுவநாதன், வால்பாறை. 85. பா. வளன் அரசு, க. மு. திருநெல்வேலி-2- 86. கரு. பேச்சிமுத்து, திருச்சி-14, 87. அ. சாமிக்கண்ணு, அரூர், 88. கே. அரசு, பெங்களூர்-21 89. ந. சுப்பையா அருமடல். 90. த. சுப்பிரமணியன், செட்டிக்குளம்.

91. த. வையாபுரி, ஆனைமலை. *92.* எசு. கே. எசு. காதர், அம்பாலா. **93.** இர. சு. கிருட்டிணன், கீழ்த்தென்குலம். **94.** அ. மீ. இராமமூர்த்தி, திருவாரூர். *(95)* வை. வேதையன், திருவாரூர். *(96)* த. சரவணத் தமிழன், திருவாரூர். *(97)* மா.இறைவன், திருச்சி-14 *(98)* த. அன்பழகன், கடலூர்-1. *(99)* பெ. பெருஞ்சித்திரன், கெ. கல்லுப்பட்டி. *(100)* பெ. அன்னகாமு, கெ. கல்லுப்பட்டி.

(101 க. நாராயணன், பெகும்பகல்லாக்குடியிருப்பு. *(102)* வி. இராசமாணிக்கம், எம். ஏ, கோயம்புத்தூர்-18 *(103)* மு. கதிரவன், நெமலி *(104)* அ. கிருட்டிணசாமி, பெங்களூர்-21 *(105)* துரை-தெட்சிணாமூர்த்தி, மேலச்செம்மங்குடி. *(106)* க. சிவானந்தன், திருமலைராயன்பட்டினம் *(107)* அரங்க-திருமாறன், புதூர். உரத்தநாடு. *(108)* க. அன்புமணி, திருச்சி-15 *(108)* கரு. நடவரசன், நெய்வேலி-3 *(110)* இரா. தமிழன்பன்,(வேப்பங்குறிச்சி)

(111) ப. துரையரசன், கைகாட்டிப்புதூர் *(112)* கோ. நிலவழகன், க. மு. சென்னை-30 *(113)* க. சி. அகமுடைநம்பி, பி.இ., மதுரை *(114)* சு. வலங்கைப்பாண்டியன்,மதுரை *(115)* சி. குமாரசாமி, எல்.எம்.இ., மதுரை *(116)* பொன்-இராமானுசம் சுத்தமல்லி *(117)* நெல்லை சு. மணியன், திருச்சி-2 *(118)* முத்து-செல்வன், அலதூர் *(119)* ஆ. ப. தொல்காப்பியன், மொ. ஆலமரத்துப்பட்டி *(120)* இரா. தங்கராசன், மாரம்பாடி.

(121) ப, பெரியசாமி, விருதுநகர். *(122)* பழங்கரைவேள் பழங்கரை. *(123)* இந்திய வான்படைத் தமிழன்பர்கள். *(124)* உ. த. க. பெங்களூர் நகரக்கிளை. *(125)* செ. தென்னவன், கவுண்டன்பாளையம். *(126)* காரை-இறையடியான், காரைக்கால். *(127)* காரை-அலீம், காரைக்கால். *(128)* தே. நே. சித்திரச்செல்வி, ஆரூர். *(129)* புலவர் இ. தேவநேயச்சித்திரன், கீ.அ. செங்கழுநீர்ப்பட்டு. *(130)* வே. மு. பொதிய வெற்பன், செங்கழுநீர்ப்பட்டு.

(131) ந. அரண முறுவல், கீ. அ. நாயனூர்பாளையம். *(132)* த. முத்துக்குமரன், க. இ. பாம்பூர். *(133)* ஆர். வேணுகோபால் புதுவை-1. *(134)* இரா. செயராமன், நெய்வேலி-2. *(135)* திருவாட்டி வேளாங்கண்ணி உரோசுமரி, தி.அத்திப்பாக்கம்.*(136)* தி. ஆ. சண்முகசுந்தரம், திருச்சி-1. *(137)* மூ.இளம்பரிதி,உரத்த

நாடு. [138] ப. இளம்வழுதி, உரத்தநாடு. [139] ந. இள முருகன் அறி இ.ஆ.ப. நீடாமங்கலம். [140] பி. என். அப்பாசி கவுண்டர் காளிங்கராயன்புதூர்.

[141] சிங்கை செங்கோடன், அம்மாப்பேட்டை, தஞ்சை [142] இரா. தமிழ்வாணன், நாயனூர்பாளையம். [143] அ. தங்க ராசன், ஈப்போ, மலேசியா. [144] கு. அண்டிரன், நாயனூர்பாளை யம் (தெ. ஆ) [145] ப. தாயம்மாள் அறவாணன், சென்னை-29 [146] ச.பாண்டியன், ஈப்போ,மலேசியா. [147] பெ. புதுமைப் பிரியன், மலாக்கா, [148] புலவர் ஞா. நன்முல்லை, விரியூர். (தெ. ஆ.) [149] இரா. வெற்றியரசு, நெய்வேலி-1. [150] ப. நன்முல்லை, சிங்கை.

[151] இரா. அருட்குவை, நெய்வேலி-3. [152] அ.குமணன் சிங்கை. [153] இ. எசு. சி. மூர்த்தி. பெங்களூர்-16 [154] துரை. அருண்மொழி, நெய்வேலி-1. [155] செ. மேதலைவன் நெய்வேலி-3. [156] த. செகந்நாதன், அம்பாலாப்படைவீடு. [157] இறைவாணன், சிங்கப்பூர். [158] ப. தண்டபாணி,கான்பூர் [159] சே. கணபதி, மலேசியா. [160] புலவர்-குமர.தன்னொளியன் கண்ணமங்கலம் (வட ஆ. மாவட்டம்)

[161] ஏ செல்வராசு, கான்பூர்-8. [162] இ.செந்தமிழ்ச்சேய் பொறி, இ. அரசூர்-தெ. ஆ. மாவட்டம், [163] கி. சீதாராமகுப்தா, உடுமலைப்பேட்டை. [164] ம. துரைசாமி, பீடோங்-மலேசியா. [165] எம். ஏ. இளஞ்செல்வன். (எம்.இராமு) பீடோங்-மலேசியா. [166] பெ.அரசு, மலாக்கா. [167]இரா.காளிமுத்து,கோலாலம்பூர். [168] மருத்துவர். சி. இராமச்சந்திரன், சேலம். [169] பி.இலக்கு வன், குவைத்து. [170] புலவர். கா. சு. சண்முகம், பல்லடம்.

(171) புலவர். ப. சுப்பையன், நாச்சிப்பாளையம். திருப்பூர். (172) புலவர். திருமேனி, நாகராசன் காரைக்கால். (173) காரை-அறவாழி காரைக்கால். (174) மு. துரைச்சாமி, க.மா.அ. சுலுத்தான்பேட்டை, பல்லடம். (175) க. தமிழப்பன், அர. குரு சாமி, சி. கிருட்டிணசாமி, அ. அரங்கசாமி – திருப்பூர்-2. (176) சி. அறிவுறுவோன், அம்மையகரம். (177) திருவாட்டி. இராசேசுவரி செந்தில், அம்பாலா. (178) கல்லூர் மணியம், மலாக்கா. (179) பறம்பை. தென்னவன், பறம்புக்குடி. (180) பொ. பொன்னரசன், க. இ., மேலூர். (181) அர. இராசேந் திரன், க. இ., குளத்துப்பாளையம்-பல்லடம்.

மாணவர்கள், தமிழன்பர்கள் கவனிக்க.

அடிக்கடி பள்ளி, கல்லூரி மாணவர்களிடமிருந்தும் ஆங்காங்குள்ள தமிழன்பர்களிடமிருந்தும் **தென்மொழி, தமிழ்ச்சிட்டு** *பழைய படிகள் வேண்டியும், தென்மொழி வெளியீடுகளைக் கேட்டும் மடல்கள் வருகின்றன. சிலர் கடந்த ஏ ழெட்டு ஆண்டுகளாக வெளிவந்த படிகள் அனைத்தும் கேட்கின்றனர். அவற்றையெல்லாம் தொகுத்து விடுத்து வைப்பதில் பல இடர்ப்பாடுகளும் மிகுதியான அஞ்சற் செலவும் நேர்கின்றன. பழைய இதழ்கள் பகுதி விலைக்குக் கொடுக்கப்படும். மிகுந்த இடைச் செலவுகளால் அன்பர்கள், குறிப்பாக மாணவர்கள் நலனடைய முடியவில்லை.*

எனவே, தென்மொழியிலிருந்து ஒவ்வொரு கிழமையிலும் பெரும்பாலும் ஞாயிற்றுக் கிழமைகளில் அன்பர்கள் பழைய இதழ்களுடனும், பிற தென்மொழி வெளியீடுகளுடனும் ஒவ்வொரு கல்லூரிக்கும் வருவர். தேவையான கல்லூரி மாணவர்கள் முன் கூட்டியே தென்மொழிச் சுற்றுச் செலவின் வரவை அறிய வேண்டின் அலுவலகத்திற்கு எழுதக் கேட்டுக் கொள்கின்றோம்.

— அமைச்சர்.

விரைவில் வெளிவரவிருக்கின்றது!

பொய்மாயக் கட்சிகளின் போலிமையைக்
களைந்தெறிய —
மெய்த்தமிழ் ஆன்றோரின் நல்லாட்சி
நிலவிட —
கைவாளாய்த் தமிழர்க்கு மறமும் மானமும்
கொளுத்திட —
அரசியலைத் தனித்தமிழில் சூடு பறக்கத்
தந்திடும்

"அரசியல்"

(தனித்தமிழ்க் கிழமை இதழ்)

முழு விளக்கமும் பின்னர்!

ஆக, தங்களின் கொள்கைகளிற் பெரும்பான்மையவற்றைத் தம் கொள்கைகளாய்க் கொண்டு தொண்டாற்றிய தங்களின் முன்னேனும் அவ்வன்புப் பண்பாளனைத் தாங்களே குறை கூறல் ஏன்? என்ன விளைவு கருதி? நன்மை விளையுமென்று? தங்களின் கொள்கை தளிர்விட்டு வளர்ந்திடுமென்று? இதை எண்ணி வியப்பதா? அன்றித் தமிழினத்திற்கு இனி என்றுமே விடிவு வாராதா? என நொந்து, வெந்து, நைந்து வாடுவதா?! இப்படிக் கூறுவதால் தாங்கள் அண்ணாவைப் போற்றிப் பாடுவதையே தொழிலாகக் கொள்ளுங்கள் என்று நாங்கள் கூறுவதாய்க் கருத வேண்டா. அவரால் இயன்ற மட்டில் அவர் செய்தார். அவரைக் குறை கூறுவது, வடசொற்களைச் சிலஇடங்களில் கலந்துள்ளார் என்பதற்காகப்புரட்சிப் பாவலரையோ திருவள்ளுவரையோ எள்ளுவதற்கு ஒப்பாகும். அவரின் புகழ் பாட வேண்டா; அவரைத் தூற்றவும் வேண்டா.

—மு கதிரவன், மா. செ. தமிழ்மணி. நெமலி. வ. ஆ.

0: 258: தமிழக அரசினர் எத்துணையோ இடர்பாடுகளுக்கிடையே தமிழைப் பயிற்று மொழியாக ஆக்கி உள்ளனர். இது பற்றி அறிஞர் பலரின் கருத்துக்களும் தொடர்ந்து வந்த வண்ணமே இருக்கின்றன. ஆனால் நமது 'தென்மொழி' யின் கருத்து என்ன என்பதை என்னால் விளங்கிக்கொள்ளவே முடியவில்லை. உலகத் தமிழ்க் கழகத்தின் முடிவு தான் என்ன என்பதும் எனக்குப் புரியவில்லை. இத்தகு நிலையில் தென்மொழியும், உ. த. க. வும் வெறுமனே இருப்பது, தென்மொழி அன்பர்களுக்கு மிகுந்த மனவருத்தத்தை அளிப்பதாய் உள்ளது. உங்களது கருத்தை அறிவிக்கும்பொருட்டு, தாங்கள் ஒரு சிறு அறிக்கையையாவது விடுத்திருக்கலாம் என்றே யான் கருதுகிறேன். நல்ல பல தமிழ் நெஞ்சங்கள் தங்கள் கருத்தையும் பாவாணர் அவர்களின் கருத்தையும் அறிய விழைகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு பாவாணர் விடுத்த பயிற்றுமொழிக் கொள்கையில் ஆங்கிலந்தான் பயிற்றுமொழியாக இருக்கத் தக்கது என்று கூறியிருப்பதாகக் கேள்வியுற்றேன். தற்போதைய நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

— அ. ம. விசயகுமார். புதுவை-1.

0: 259: அன்பின் இனிய ஐயா, வணக்கம். சருகின் மேல் பற்றிய நெருப்பினையெல்லாம் கண்டு கட்டி நெருப்பென்று ஏமாறி விட்டேன். ஆற்றல்களை இனியும் சிதறடித்துக் கொண்டிருப்பது சரியன்று என்பதை உணர்ந்து விட்டேன். எனவே இனி எப்பொழுதும் தங்கள் தலைமையின் கீழ்ப் பணிபுரிவதே தமிழன்னைக்குச்செய்யும் தொண்டு என்று உறுதி பூண்டுவிட்டேன். "மீட்சி" என்றும் "எழுச்சி" என்றும் ஆற்றல்களைச் சிதறவிடுவதற்கு பகரமாக, தனித்தமிழ்ச்செய்தித்தாள்ஒன்று தமிழகத்தையே ஆட்டிப் படைக்கும் வண்ணம் வெளிவர முயலவேண்டுவது தனித்தமிழ் அன்பரின் வேண்டுகோள். இன்னும் ஈராண்டுகளில் தனித்தமிழ்ச் செய்தித்தாள் வெளிவந்துவிடின் தமிழகத்திற்குவிடிவுக்காலம்தோன்றும். எதையும் செய்து முடித்துவிடுவோம் என்று சூளுரை செய்தவரெல்லாரும் கடைசியில் தங்களையே நாடி நின்ற செய்திகள் ஏராளம்! எவ்வளவோ பெயர்கள் முயன்றும் இயலாத பாவணர் பேரகர முதலித் திட்டம் கடைசியில் தங்கள் ஒருவராலேயே செயல்பட்டது.

(அடுத்த பக்கம் பார்க்க)

எனவே "மீட்சி"யோ வேறெதுவோ எதுவும் செய்யவியலாத ஒன்று தங்கள் ஒருவராலேயே இயலும். ஆகையால் விரைவில் தனித்தமிழ்ச் செய்தித்தாள் வெளிவரத் தாங்கள்தாம் முயலவேண்டும் என்று கருதுகிறேன். செய்தித்தாளோடு, வலிவுசான்ற ஓர் அரசியல் கழகமும்–தனித்தமிழையும், விடுதலை உணர்வையும் பரப்ப–மிக இன்றியமையாதது என்பதைத் தாங்கள் அறிவீர்கள் என்று கருதுகிறேன். அடுத்த ஆண்டு வெளிக்கொணரத் திட்டமிருக்கும் அரசியல் இதழை, அதற்கடுத்த ஆண்டு நாளும் வெளிவரும் செய்தித்தாளாகச் செய்ய முயலுமாறு தங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

—கி. அரிமா மகிழ்கோ, புதுவை–5.

0: 260: தங்களது தனித்தமிழ் நாட்டத்தையும் பொது உடைமைக் கருத்தையும்யான் பெரிதும் வரவேற்கின்றேன். ஒருமொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தம் மொழிக்குச் செய்யும் சிறப்பான தொண்டினால்தான் அம்மொழி செழித்து வளரமுடியும்.... வாழ்க்கையில் வெற்றி பெற்றிருக்கும் ஓர் இனந்தான் தன் தாய் மொழித் தனிப்பண்பை வளர்த்துச் சிறக்கச் செய்து உலகம் அறியச் செய்யமுடியும். அவ்வாறின்றி வறுமையால் வாட்டப்பட்டும், அரசியல் சூழ்ச்சிக்காரர்களால், சுரண்டப்பட்டும், குல சமயக் கருத்துகளால் தாழ்த்தப்பட்டும் இருக்கும் ஓர் இனம் தன்மொழியை எவ்வாறு காத்துச் சிறக்கச் செய்ய இயலும்? வேண்டுமேயானால் தாய்மொழியே எங்கள் உயிர், உடல், பொருள், ஆவி என்று கூச்சலிடும் கூட்டத்தாரை அமைச்சரவையில் இடம்பெறச் செய்ய இயலுமேயல்லாமல் வேறு ஒன்றும் செய்யஇயலாது. ......ஆனால் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரின் இன்றைய நிலை என்ன? உணவுக்கும், உடைக்கும் உறைவிடத்துக்கும் உடல் உருக உழைத்தும் உயரக்காணோம். கரணியம் என்ன ? குல சமய அரசியலால் உயர்ந்தவர்கள் எனப்படும் ஒருசிலர் குமுகாயத்தில் உள்ள வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு உண்மையாக உழைக்கின்ற உயர்தனித்தமிழனைச் சுரண்டித்தான் பணம் குவிக்கின்றனர். இவையனைத்தும் போதாது என்று தன் தாய் மொழியையும் விலைபேசுகின்றனர். அதைவிடக் கொடுமை, மொழியை அரசியலுக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தும் அவலநிலை. இவை அனைத்தும் மேல்பட்ட நிலையில் இருக்கும் "மேலோர்"களால் தானே முடிகிறது. இவர்கள்தாமா தமிழர்கள்? இல்லை. எஞ்சியிருக்கும் 90விழுக்காட்டு மக்களால் மட்டுமே தமிழை–தமிழ்ப் பண்பை வளர்க்க இயலும். ஆனால் அந்த 90 விழுக்காட்டு மக்கள் நிலைதான் வறுமையால் வாட்டப்பட்டுள்ளதே. பின் எப்படித் தமிழ் வளரமுடியும்? அவர்களை அந்த நிலையில் விட்டு விட்டுத் தமிழை வளர்ப்போம் என்பது இயலாத ஒன்று என்பதே எளியவனாகிய என் கருத்து. தமிழ் சிறக்கவேண்டின் பெரும்பான்மையான தமிழர்நிலை சிறத்தல்வேண்டும். அதே நேரத்தில் மொழியும், மொழிச் செல்வமும், பொருளியலைப் போன்ற இன்றியமையாத ஒன்று என்பதை நாம் மறத்தல் கூடாது. எனவே தாங்கள் தனித் தமிழ்த் தொண்டுடன் – தமிழர்கள் அரசியல், பொருளியல் விடுதலையுடன்– மக்கள் சமநிலைபெற்று உயர்வதற்கான குமுகாயச் சீர்திருத்தப் பணியிலும் முழு முச்சுடன் ஈடுபடல் வேண்டும். அறிவாலும், ஆற்றலாலும் சிறந்த தாங்கள் எண்ணி நல்ல முடிவு காண்பீர் என்றே நம்புகின்றேன். –மு. பழனிவேலு, அழகப்பர் கல்லூரி, காரைக்குடி-3.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழ்நாடு.